வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 02.11.2022 புதன்கிழமை | இதழ் : 329 | பக்கங்கள் : 16

## ஓ. எம். பிக்கு எதிராக போராட்டம் பொலிஸ் தடுத்ததால் பதற்றநிலை!



கிளிநொச்சி, நவ. 02

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்துக்கு (ஓ. எம். பி.) எதிர்ப்பு தெரிவித்து கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை வலிந்து பொலிஸார் அடக்க முற்பட்டனர். இதனால், அந்தப் பகுதியில் நேற்று பதற்றம் நிலவியது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம் நேற்று செவ்வாய்க்கிழமை பதிவுகளை முன்னெடுத்தது.

15

### காணி ஆக்கிரமிப்புக்கு எதிராக

## தெல்லிப்பழையில் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 02

வலி. வடக்கு காணி ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை சந்தியில் போராட்டம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் அனைவரையும் ஒன்றிணையுமாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரெழுச்சி இயக்கம், சிவ குரு ஆதினம், வலி. வடக்கு மீள்குடியேற்ற குழு, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், வட, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம், தீவக விருட்சம், தேசிய மீனவர்

15

# அரசுக்கு எதிராக இன்று போராட்டம்!

### 20 அரசியல் கட்சிகள், 150 பொது அமைப்புகள் ஆதரவு

கொழும்பு, நவம்பர் 02

அரசாங்கத்தின் அனைத்து அடக்குமுறைகளுக்கும் எதிர்ப்பு தெரிவித்து இன்று புதன்கிழமை கொழும்பில் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு மருதானை எல்பின்ஸ்டோன் திரையரங்கம் முன்பாக ஆரம்பமாகும் மக்கள் பேரணி கோட்டை ரயில் நிலையத்தை சென்றடையும். இதன் பின்னர் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

15



## அமைதிவழி பேரணியை அடக்க முற்படக்கூடாது!

### எதிர்க்கட்சி தலைவர்

கொழும்பு, நவ. 02

கொழும்பில் இன்று புதன்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள பேரணியானது அமைதி வழியிலானது. இதனை அடக்குவதற்கு படைத் தரப்பினர் தயாராக இருந்தால் உடனடியாக அந்த தயார்படுத்தல்களை மீளப்பெற வேண்டும் - என்று

15



## "சுடுவதென்றால் சுடுங்கள்..."

### மிரட்டிய படையினரிடம் கூறிய கஜேந்திரகுமார்!

யாழ்ப்பாணம், நவ. 02

"பௌத்த கொடியை நட்டால் நாம் கழற்றுவோம். சுடுவதென்றால் சுடுங்கள்.", என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருடன் ஏட்டிக்கு போட்டியாக நடந்து முரண்பட்ட படையினருடன் தர்க்கப்பட்டார் கஜேந்திரகுமார் எம். பி.

15

## போராட்டத்துக்கு தலைமை யார்? சஜித், அநுர தரப்பிடையே போட்டி

கொழும்பு, நவ. 02

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்று புதன்கிழமை கொழும்பில் பெரும் போராட்டம் முன்னெடுக்கப் படுகின்றது. இந்தப் போராட்டத்தின் தலைமையை பெறுவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித், ஜே. வி. பியின் அநுரகுமார திஸநாயக்க இடையே கடும் போட்டி நிலவுகிறது.

நாட்டில் தேர்தலுக்கு அழைப்பு எதுவும் விடுக்கப்பட வில்லை. ஆனால்,

15

## உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் அதிகரிக்கும்!

### பிரதமர் தினேஷ்



கொழும்பு, நவ. 02

உள்ளூராட்சி நிறுவனங்களின் சட்டங்களுக்கமைய அவற்றின் அதிகா

15

## குருந்தூர் விகாரையின் இடத்தில் கோயில் அமைப்பதற்கு சதியாம்!

### 46 பௌத்த அமைப்புகள் இப்படி கடிதம்!

கொழும்பு, நவ. 02

குருந்தூர் விகாரை அமைந்துள்ள தொல்பொருள் பகுதியில் சட்டத்துக்கு முரணாக கோயில் ஒன்றை நிறுவ முயற்சிப்பது முற்றிலும் தவறானதாகும். இல்லாதுவிடின் நாங்கள் நீதிமன்றத்தை நாடுவோம் - இப்படித் தெரிவித்து பௌத்த மத அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள் உள்ளடங்கலாக 46 அமைப்புக்கள் புத்த சாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர

15

## 10 மில்லியன் லீ. டீசல் அன்பளித்தது சீனா!

கொழும்பு, நவ. 02

இலங்கையின் பின்தங்கிய பகுதிகளில் உள்ள விவசாயிகள், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 106 இலட்சம் லீற்றர் டீசலை அன்பளிப்பு செய்துள்ளதாக இலங்கைக்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பற்றி முன்னர் இந்தப் பத்தியில் எழுதும்போது ஒரு விடயத்தை குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் தனது அமெரிக்க பிரஜாவுரிமையை இரத்துச் செய்வதற்கு முன்னதாக நடந்த சம்பவம் அது.

ஓர் அமெரிக்க பிரஜை தனது பிரஜாவுரிமையை இரத்துச் செய்வது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர் ஒருதடவை அமெரிக்க தூதரகத்துக்கு சென்றிருந்தார். அங்கே அவர் தூதரக அதிகாரிகளிடம் கேட்டறிந்த விடயங்களில் ஒன்று, இப்போது தனது பிரஜாவுரிமையை இரத்து செய்தால் மீண்டும் அதனைப்பெற்றுக்கொள்ள முடியுமா என்பதுதான்.

அதாவது தான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது பிரஜாவுரிமைய இரத்துச் செய்தாலும் பின்னர் அதாவது தேர்தலில் தோல்வியடைந்தாலோ அல்லது வெற்றியடைந்து தனது பதவிக்காலம் முடிவடைந்தாலோ மீண்டும் அமெரிக்க பிரஜாவுரிமையைப் பெற்று அங்கே தனது கடைசிக்காலத்தைக் கழிக்கவே அவர் விரும்பினார் என்பதே அதனால் நாம் பொருள் கொள்ளத்தக்கது. இந்தத் தகவலை தூதரக வட்டாரங்களுடன் நெருக்கமான ஒருவர் ஊர்க்குருவியிடம் தெரிவித்திருந்தார்.

மீண்டும் அமெரிக்க பிரஜாவுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தனது பதவிக்காலத்தில் பல விடயங்களில் நிதானமாக நடந்துகொண்டார் என்றும் கூறப்படுவதுண்டு.

தாய்லாந்திலிருந்து தாயகம் திரும்பிய அவரை அவரின் முக்கிய ஆலோசகர்கள் இருவர் சில வாரங்களுக்கு முன்னர் சந்தித்திருந்தமை பற்றியும் அந்தச் சந்திப்பின் பின்னர் அவர் மீண்டும் அரசியலில் ஈடுபட ஆயத்தம் செய்வது பற்றியும் முன்னர் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன். தேர்தலில் வேட்பாளராக அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே தெற்கில் கிராமங்கள்தோறும் உள்ள - சுமார் முப்பதாயிரத்திற்கும் அதிகமான பௌத்த ஆலயங்கள் ஊடாக தனது பிரசாரத்தை முன்னெடுத்திருந்த அவர், இப்போது அந்த பௌத்த ஆலயங்களின் ஊடாக தனது ஆட்சிக்காலத்தில் என்ன தவறு நடந்தது என்பது குறித்தும் தன்னைச் சுற்றியிருந்தவர்களாலேயே எல்லாம் நடந்தது என்பது பற்றியும் விளக்கமளிக்க அவர் ஆயத்தமாகி வருகிறார் என்று அந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அதுபோன்ற பிரசாரங்கள் நடந்ததா அல்லது நடக்கின்றதா என்பது தெரியவில்லை. ஆனால், அண்மையில் மின்சாரத்துக்கான விலைகள் அதிகரிக்கப்பட்ட நேரத்தில், பௌத்த ஆலயங்கள் மின்வெட்டை எதிர்கொள்ளவிருந்தவேளையில் அவற்றுக்கு உதவுவதில் அவர் அக்கறை காட்டினாரென சில செய்திகள் வெளிவந்திருந்தன.

அந்த நிலையிலேயே அண்மையில், மகிந்த தரப்பினர் மீண்டும் மக்கள் சந்திப்புகளை ஆரம்பித்துள்ள நிலையில், அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும் ஆனால், அவர் அதனை மறுத்து விட்டார் என்றும் இப்போது தெரியவந்திருக்கின்றது.

ஓடிப்போன ஒரு ஜனாதிபதியாக கட்சியின் அரசியல் கூட்ட மேடைகளில் ஏற கோட்டாபய ராஜபக்ஷ மறுத்து வருகிறார் என்று சிங்கள வார ஏடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது மலலசேகர மாவத்தையில் அவருக்கு வழங்கப்பட்ட புதிய அதிகாரபூர்வ இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் தொகுதிகளுக்கான கூட்டம் தொடங்கியதையடுத்து, கோட்டாவுக்கு விசுவாசமான பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கோட்டாவை கட்சியின் மேடைக்கு அழைக்க முயன்ற போதிலும், கோட்டா அதற்கு மறுப்பு தெரிவித்துள்ளார்.

நாட்டை விட்டு வெளியேறிய ஜனாதிபதியாக தான் இருப்பதால், அதனை மீளக் கைப்பற்றி பதவியேற்ற பின்னரே அரசியல் மேடைகளில் ஏறுவதற்கு அவர் சபதம் எடுத்திருப்பதாக அவருடன் பேசிய பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் பொதுஜன பெரமுனவின் மேடையில் ஏறினால் கட்சிக்கு எதிர்மறையான தாக்கத்தை கோட்டா ஏற்படுத்துவார். இதனால் அவர் கட்சியின் மேடையில் அமர மறுத்து வருவதாக கடந்த வாரம் கட்சியின் முக்கிய தலைவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் அந்த சிங்கள வார ஏடு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, மேலே குறிப்பிட்டது போல அவர் மீண்டும் அமெரிக்க பிரஜாவுரிமைக்கு இதுவரை விண்ணப்பிக்கவில்லை என்றும் அங்கு வாழும் தனது ஒரே புதல்வர் ஊடாக, கிறீன் கார்ட் பெறுவதற்காகவே விண்ணப்பித்திருக்கிறார் எனவும் தூதரக வட்டாரங்கள் மூலம் தெரியவந்திருக்கின்றது.

கிறின்கார்ட் என்பது பிரஜாவுரிமை அல்ல என்பதும் அதனைப் பெறுவதால் அவர் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்கமுடியாது என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆக, நடக்கும் சம்பவங்களை பார்த்தால் அடுத்த சுற்றுக்கு அவர் தயாராகி வருவதாகவே தெரிகின்றது. மீண்டும் சிங்கள தேசியவாதத்தை அவர் முன்னரைவிட தீவிரமாக எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை.!

- ஊர்க்குருவி

# யாழ். கூட்டுறவுச் சங்க தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை!

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்க தலைவருக்கு எதிராக பொதுக்குழு உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வந்துள்ளனர்.

இதேவேளை, சுமுகமான உறவை பொதுச் சபையுடன் பேண வேண்டிய பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவரின் செயல்பாடுகள் சங்கத்தின் ஜனநாயகப் போக்கின்பால் உள்ள பற்றுறுதியை கேள்விக்கு உட்படுத்துகின்றது. எமக்கு நேரடியாக பதில் தராத பொதுச்சபை தீர்மானப் படியான எமது குழுவை ஏற்றுக்கொள்ளாமல் கிளைக் குழுவை பொதுச் சபை உறுப்பினருக்கு பொதுவாக எழுதும் கடிதங்களின் பிரதிகளை அனுப்பியுள்ளார்.

இது தவிர, கலந்துரையாடலுக்கு முகங்கொடுக்கத் தயங்குகின்றார் என்றும் யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு எதிராக பொதுக்குழு உறுப்பினர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் தொடர்ந்து இணக்கப்பாட்டுக்கான கலந் துரையாடலுக்கு வரத்தயங் குவதால் அவருக்கு எதிராக பொதுக்குழு உறுப்பினர்கள் நம்பிக்கையில்லா பிரேரணையை சங்கச் செயலாளரிடம் சமர்ப்பித்துள்ளதோடு, அதன் பிரதியை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இதில், 70 பொதுக்குழு உறுப்பினர்களில் 50 பேர் கையொப்பமிட்டுள்ளனர் என்று அறிய வருகிறது. (ஐ)

# சிரேஷ்ட மாணவர் தாக்கியதாக பல்கலை மாணவன் முறைப்பாடு

கொழும்பு, நவ. 02

சிரேஷ்ட மாணவர்கள் குழுவினர் தனக்கு பகிடிவதை அளித்ததாக களனி பல்கலைக் கழகத்தின் இரண்டாம் வருட மாணவர் ஒருவர், கிரிபத் கொடை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று தனது விரிவுரைகளின் பின்னர் விளையாட்டுப் பயிற்சிக்காக பல்கலைக்கழக விளையாட்டு திடலுக்குச் சென்று கொண்டிருந்தபோது சிரேஷ்ட மாணவர்கள் குழுவினால் தான் தாக்கப்பட்டதாக குறித்த மாணவர் முறைப்பாடு செய்துள்ளார்.

சிரேஷ்ட மாணவர்கள் குழு தன்னை பல்கலைக்கழக சிற்றுண்டிச் சாலைக்கு அழைத்துச் சென்று தலைமுடி மற்றும் தாடியை மழிக்குமாறும், சப்பாத்துகளுக்கு பதிலாக செருப்பு அணியுமாறு கூறியதாகவும், பின்னர், மூன்று பேர் தன்னை முகம் மற்றும் உடலில் தாக்கியதாகவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலின்போது சம்பவ இடத்தில் 7 மாணவர்கள் இருந்ததாகவும் அவர்கள் பெயர் தெரியவில்லை எனவும், நேரில் பார்த்தால் அடையாளம் காண முடியும் எனவும் சம்பந்தப்பட்ட மாணவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான மாணவனை ராகம வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பிரசன்னப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ள அதே வேளை, தொடர்புடைய மாணவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுத்துள்ளதாக கிரிபத் கொடை பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# இந்திய துணை தூதரக ஏற்பாட்டில் வல்லபாய் பட்டேல் கண்காட்சி!

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் தேசிய ஒற்றுமைக்கான நாளை முன்னிட்டு சர்தார் வல்லபாய் பட்டேலின் கண்காட்சி தேநீர் ஊடாக ஒற்றுமையை கொண்டாடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா , யாழ். மாநகர சபை முதல்வர் , சட்டத்தரணி வி. மணிவண்ணன், ஆணையாளர் இ. த. ஜெயசீலன், உறுப்பினர் வ. பார்த்திபன், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 23

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் 'வேல் கொண்டு வினை தீர்க்கும் வேலவன்' என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.”

-வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.11.2022 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 17

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## அரசியல் சதுரங்கத்துக்கும் மேலானது

அமெரிக்க அரசியல் விஞ்ஞானியான ஸ்பிக்னியு ப்ரஸிஜின்ஸ்கி ‘மிகப்பெரிய சதுரங்கப்பலகை’ என்னும் நூலொன்றை எழுதியிருக்கின்றார். இவர், ஜிம்மி கார்டர் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது 1977- 1981 வரையான காலப்பகுதியில் அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும் இருந்தவர். இது அமெரிக்காவுக்கான மூலோபாயம் தொடர்பான நூல் - அதாவது, பனிப்போருக்கு பின்னரான காலத்தில் அமெரிக்காவின் உலகளாவிய முதன்மையை நீண்ட ஆயுள்மிக்கதாக மாற்றும் நோக்கில் சதுரங்கத்தை எவ்வாறு ஆடுவது என்பதுதான் இந்த நூலின் சாரம்சமாகும். அதாவது, அதிகாரத்தைத் தக்கவைப்பதற்கான அரசியல் ஆட்டம் என்பது அடிப்படையில் ஒரு மூலோபாய ஆட்டமாகும். அது ஆற்றலுள்ள அனைத்து போட்டியாளர்களையும் தோற்கடிக்கும் நோக்கில் ஒவ்வொரு காய்களையும் நுட்பமாக நகர்த்தி வீழ்த்தும் ஆட்டமாகும்.

எனவேதான் நாம் அரசியல் சதுரங்க ஆட்டத்தை சாதாரண சதுரங்கத்துக்கும் மேலானது என்கிறோம். அரசியலில் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கில் இயங்கும் ஒவ்வொரு தரப்பும் தங்களுக்கு ஏற்றவாறு இந்த ஆட்டத்தை ஆடியே ஆகவேண்டும். சாதாரண சதுரங்க ஆட்டத்தில் வெற்றியடைந்தவுடன் சதுரங்க ஆட்டம் முடிவடைந்துவிடும். அதாவது ‘செக்மேற்’றுடன் அனைத்தும் முடிந்துவிடும். ஆனால், அரசியல் சதுரங்க ஆட்டம் ஒருபோதுமே முடிவடைவதில்லை. இதனால்தான் அரசியல் சதுரங்கத்துக்கும் மேலானது. ரணில் விக்கிரமசிங்க கூறுவதுபோல் அது சில வேளைகளில் மரதன் ஓட்டம் போன்றது. சில வேளைகளில் ‘ரகர்’ போன்ற கடுமையானதோர் ஆட்டம். சிலவேளைகளில் ‘பொக்சிங்’ போன்றது - அதாவது, இரத்தம் பார்க்கும் ஆட்டம். இத்தனையும் கடந்துதான் இலக்கை நெருங்க வேண்டும். ரணில் தனது அனுபவத்திலிருந்து இதனைக் கூறியிருக்கலாம்.

தமிழ்த் தேசிய அரசியலில் இதுவரையில் உச்ச இலக்கை தொட முடியவில்லை. அதாவது, தொடமுடியவில்லை என்பதை விடவும் நெருங்கக்கூட முடியவில்லை என்பதுதான் உண்மை. 1949இல் இலங்கை தமிழ் அரசு கட்சி உருவாக்கப்பட்டது. ஆங்கிலத்தில் அதன் பெயர் சமஷ்டி கட்சி. அதாவது, சமஷ்டி தீர்வுதான் தமிழ் அரசு கட்சியின் உச்ச இலக்காகும். 1970களுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ்த் தேசிய அரசியல் தனிநாட்டுக்கான சிந்தனையை நோக்கி நகர்ந்தது. இந்தப் பின்புலத்தில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி உருவாகியதும் பின்னர் தனிநாட்டுக்கான வட்டுக்கோட்டை பிரகடனம் செய்யப்பட்டதும். உண்மையில், தனிநாட்டுக்கான கோரிக்கையில் செல்வநாயகம் தலைமையிலான மிதவாத அரசியல்வாதிகள் உறுதியான நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில், அவர்களுக்கு அதனை அடையும் வழி தெரியாது.

இந்தப் பின்புலத்தில்தான் ஆயுத இயக்கங்கள் எழுச்சியுற்றன. ஆயுதங்கள் மூலம் தனிநாட்டை அடைய முடியுமென்றே அனைத்து இயக்கங்களும் நம்பியிருந்தன. 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிலைமைகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்தியாவின் எல்லைக்கோடு எதுவென்பது தெளிவாகத் தெரிந்தது. இந்தியாவின் தயவில்லாமலும் தங்களால் தனிநாட்டை அடையமுடியுமென்னும் நம்பிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தது. முள்ளிவாய்க்கால் முடிவுடன் அனைத்தையும் மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 2009இற்கு முன்னரான தமிழ்த் தேசிய அரசியலானது வெற்றியை மட்டுமே இலக்காகக் கொண்டிருந்தது.

2009இற்கு பின்னர் அதாவது, யுத்தத்தில் தோல்வியுற்றதைத் தொடர்ந்து யுத்தத்தின் விளைவுகளை முதன்மைப்படுத்துவதன் மூலம் அரசியல் இலக்கை அடைய முடியுமென்னும் நம்பிக்கையிலேயே கடந்த 13 வருடங்கள் நகர்ந்திருக்கின்றன. ஆனால், எந்தவொரு முன்னேற்றத்தையும் நமது அரசியல்வாதிகளால் நிரூபிக்க முடியவில்லை. அரசியல் சதுரங்கத்தை நாங்களும் ஆடுவதாகக் கூறிக் கொள்கின்றோம். ஆனால், எங்களால் ஆகக் குறைந்த வெற்றியைக்கூட நிரூபிக்க முடியவில்லை. ஆட்சிகள் மாறுகின்றன. ஆனால், அதனை உச்சளவில் எங்களால் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. தவறு எங்கிருக்கின்றது. இனியும் சிங்கள ஆட்சியாளர்கள் எதனையும் தரப்போவதில்லை. பெற்றுகொள்ளும் நோக்கில் தமிழர் தரப்புக்கள்தான் ஆட்டத்தை நகர்த்த வேண்டும். மற்றவர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்று கூறுவது ஆட்டமல்ல. அது ஆட்டத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் கூறும் விடயமாகும்.

# பொறுத்தது போதும் என பொங்கி எழுந்த மக்கள்!

**இராஜதந்திரி**

*இலங்கையின் அரசியல் வரவாற்றிலே ஒரு முக்கியமான சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது. அங்கே காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை பலவந்தமாக வெளியேற்றியுள்ளனர். இதன்மூலம் இலங்கையின் நீதித்துறையால் தமக்கு ஏற்பட்ட பாதிப்பையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.*

*வடக்கு - கிழக்கில் வலிந்து காணாமாக்கப்பட்டோரின் உறவுகள் கடந்த பல வருடங்களாகவே காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத்தேடி அங்கலாய்த்தவர்களாக இருக்கின்றனர். சிலர் மன உளைச்சல் காரணமாக ஏக்கத்தினால் உயிரிழந்தனர். காணாமலாக்கப்பட்டோரின் வேறு சில உறவுகள் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை வரை சென்றுங்கூட காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் குறித்து பேரவை பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்திருந்திருந்தனர்.*

*வெறுமனே கண்துடைப்பாக ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் என்று ஆரம்பித்து காணாமலாக்கப்பட்டோரின் கண்ணீரில் கரைந்த கதைகளை அந்த ஆணைக்குழுக்கள் செவிமடுத்தனவே தவிர எவ்வித்திலும் நீதியான தீர்வுகள் பாதிக்கப்படடோருக்கு கிடைக்கவில்லை.*

*காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நடத்தாத ஆர்ப்பாட்டங்களும் இல்லை. அவர்கள் ஏறி இறங்காத ஆணைக்குழுக்களும் அலுவலகங்களும் இல்லை. இத்தகைய பின்னணியிலேயே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாண செயலகத்திலிருந்து பாதிக்கப்பட்ட மக்களால் வெளியேற்றப்பட்டுள்ளார்.*

*நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு நடந்தது தென்னிலங்கையிலுள்ள ஏனைய அமைச்சர்களுக்கும் ஒரு நல்ல படிப்பினையாக அமையுமென்றே கருதலாம்.*

*ஏனெனில், “சிலரை சில காலம் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது” என்பது முதுமொழி. வடக்கு - கிழக்கு மக்கள் ஏற்கனவே அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக ஏமாந்து போயுள்ளனர். இதுதவிர, பேரினவாதிகளின் பல தரப்பட்ட அநீதிகளாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இத்தகைய பின்னணியிலேயே நீதி அமைச்சர் ஆழமறியாது காலைவிட்டு அவமானப்பட்டுள்ளார். விஜயதாஸ ராஜபக்ஷ யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட சம்பவம் “நீறு பூத்த நெருப் பின்” மீது அவர் காலை வைத்தது போன்றே அமைந்திருந்தது.*

*காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மாத்திரமல்ல. யுத்தத்தால் அபலைகளான விதவைகள், அநாதைகள் , அகதிகள் என்று ஏராளமானவர்கள் வடக்கு - கிழக்கில் இருந்துவருகின்றனர். முப்பது வருட கால யுத்தம் ஏற்படுத்திய வடுக்கள் சாமான்யமானவையல்ல. பரிதவித்து நிற்போரின் உணர்வுகளை நாடிபிடித்தறியாதவராக யாழ். மாவட்ட செயலகத்துக்கு வந்திருந்த நீதி அமைச்சருக்கு காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தகுந்த பாடம் கற்பித்துள்ளனர் என்றே கருத முடியும். ஏனெனில், பரிதவித்து நிற்கும் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் தம்மவரைத் தேடித்தரும்படி கோரி வருகின்ற நிலையில் அவர்களுக்கு நட்டஈடாக இரண்டு இலட்சம் ரூபாயை வழங்குவதற்கு முன்வந்தமை கூட வெந்த புண்ணில் வேல் பாயச்சுவதாகவே அமைந்திருந்தது.*

*காணாமலாக்கப்பட்டோரின் நிலவரம் மிகப்பரிதாபகரமானது. ஏனெனில், காணாமல் ஆக்கப்பட்டவர்களால் பரிதவித்து நிற்கும் நிலை ஒரு புறமிருக்க, தமது வாழ்வாதாரத்தையும் பெற முடியாதவர்களாக பாதிப்புற்றோர் இருக்கின்றனர். ஏனெனில், காணாமல் ஆக்கப்பட்டவர், பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தலைவராக, சகோதரனாக, அல்லது பல்வேறு விதத்திலும் நம்பியிருந்த ஒருவராக இருக்க முடியும்.*


*அவர்கள் இன்று தமது உறவுகளோடு இருந்திருந்தால் பாதிக்கப்பட்ட மக்களின் குடும்ப சுமைகளை சுமந்திருக்கவும் முடியும். ஆனால், எத்தகைய துணையோ ஆதரவோ இன்றியிருக்கின்ற மக்களை பணத்தால் வருடிவிட அரசதரப்பு முனைவது கவலைக்குரியதாகவே இருக்கின்றது.*

*தற்போதைய தருணத்தில் பணத்தையோ அல்லது வேறு நஷ்டஈடுகளையோ வழங்குவதன் மூலம் அனைத்தையும் பூசிமெழுகி விடலாமென அரசு நினைப்பது ஒரு தப்புக் கணக்காகவே இருக்க முடியும். ஏனெனில், பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுவதெல்லாம் தம்மவர்களை கண்டறிந்து தரமுடியாவிடில் ஒரு சர்வதேச பொறிமுறையுடன்கூடிய நீதி விசாரணையை மேற்கொண்டு தமக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்பதேயாகும்.*

*இதன் வெளிப்பாடகவே யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷகூட விரட்டப்பட்டுள்ளார்.*

*தாம் முகங்கொடுக்க நேர்ந்த இந்தத் துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை ஓர் அவமானமாகக் கருதாது, பாதிக்கப்பட்ட மக்களின் நியாயமான உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடே என்பதை அறிந்து அந்த மக்களுக்கு நீதியை வழங்குவதே நீதி அமைச்சரின் நேர்த்தியான அணுகுமுறையாக அமைய முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

உங்கள் எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும். புதிய முயற்சி பலன் தரும். எண்ணம் பலிக்கும். வியாபாரத்தில் ஆதாயம் கிடைக்கும். நண்பர்கள் மூலம் உங்கள் செயலில் வெற்றி காண்பீர்கள்.

**இடபம்**

தொழிலில் இருந்து வந்த தடை விலகும். நீங்கள் ஈடுபடும் முயற்சியில் மேன்மை உண்டாகும். நேற்று நினைத்ததை இன்று செய்து முடிப்பீர்கள். மகிழ்ச்சியில் குடும்பம். வியாபாரத்தில் இருந்து வந்த தடை விலகும்.

**மிதுனம்**

உங்கள் முயற்சியில் சிறு சிறு சங்கடத்தால் அலைச்சல் ஏற்படும்.எதிர்ப்புகள் உண்டாகி உங்கள் மனதில் குழப்பத்தை ஏற்படுத்தும். நிதானம் தேவை. திடீர் பயணத்தால் மனவுளைச்சல் ஏற்படும்.

**கடகம்**

வாழ்க்கைத் துணையுடன் தள்ளிப்போன சுப நிகழ்ச்சி ஒன்றை மீண்டும் நடத்துவீர்கள். நண்பர்களிடம் ஏற்பட்ட பிரச்னை முடிவிற்கு வரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். நிதிநிலை சீராகும்.

**சிம்மம்**

நீண்ட நாள் பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். மனதில் இருந்த குழப்பம் விலகும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். சுறு சுறுப்பாக செயல்படுவீர்கள். தொழிலில் லாபம் காண்பீர்கள்.

**கன்னி**

நிதிநிலை அதிகரிக்கும். நீங்கள் ஈடுபடும் முயற்சி ஒன்றில் வெற்றி காண்பீர்கள்.எதிர்பாராத பணம் கைக்கு வந்து அத்யாவசிய தேவையை பூர்த்தி செய்யும். குடும்பத் தேவை நிறைவேறும்.

**துலாம்**

உங்களுடைய திறமை இன்று மற்றவர்களுக்கு தெரியவரும். பெருமை உண்டாகும். உங்கள் முயற்சியால் தொழிலில் பெரிய லாபம் காண்பீர். உங்கள் முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருட்சிகம்**

துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். நம்பிக்கையானவர்களை சந்திப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். பழைய கடன்களை அடைப்பீர்கள். யோகமான நாள். உங்கள் செல்வாக்கு வெளிப்படும்.

**தனுசு**

பணம் நகைகளைக் கையாளுவதில் கவனம் தேவை. இல்லையெனில் இழப்பு ஏற்படும். உங்கள் எண்ணத்தில் ஒன்று நிறைவேறும். நண்பர் உதவியால் ஆதாயம் காண்பீர்கள். வரவுகளுக்கு ஏற்ப செலவு உண்டு.

**மகரம்**

இனம் புரியாத குழப்பம் ஏற்பட்டு செயல்களில் கவனம் செலுத்த முடியாமல் போகும். உங்கள் மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தை ஏற்படுத்தும். எதிர்பார்ப்பில் தடை தோன்றும்.

**கும்பம்**

குடும்பத்திற்காக செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் தாமதமும் உண்டாகும். அலைச்சல் அதிகரிப்பதால் சோர்வடைவீர்கள். திடீர் செலவு ஏற்படும்.குடும்பத்திற்குள் நிம்மதியற்ற நிலை உருவாகும்.

**மீனம்**

வரவேண்டிய பணம் வந்து சேரும். உங்கள் எண்ணம் ஒன்று நிறைவேறும். விலகிச் சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். எதிர்பார்ப்புடன் ஈடுபட்ட ஒரு செயலில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# ஈழத் தமிழர் பாரம்பரிய உணவகம் திறந்துவைப்பு!




தூத்துக்குடி, நவ. 02

தூத்துக்குடியில் மாநகராட்சி வணிக வளாகத்தில் 'ஓலைப் புட்டு' என்ற பெயரில் இலங்கைத் தமிழர் புதிதாக அமைக்கப்பட்ட பாரம்பரிய உணவகத்தை தூத்துக்குடி மக்களவை உறுப்பினரும் தி. மு. க. துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி திறந்து வைத்தார்.

பொலிவுறு நகரத் திட்டத்தின்கீழ் தூத்துக்குடி தச்சர் தெருவில் மாநகராட்சி வணிக வளாகம் ரூ. 2 கோடி இந்திய மதிப்பீட்டில் 6,310 சதுர அடியில் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தரைதளத்தில் 8 கடைகளும், முதல் தளத்தில் 4 கடைகளும் வணிகர்கள், பொதுமக்கள் பயன்பாட்டுக்கு அளிக்கப்படவுள்ளது. இதில், ஒரு கடையில் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் பெண்கள் நடத்தும் 'ஓலைப் புட்டு' என்ற உணவகம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வணிக வளாகம், உணவகம் திறப்பு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. சமூக நலன், மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ. கீதா ஜீவன் தலைமை வகித்தார். ஆட்சியர் கி. செந்தில்ராஜ், மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் சாருஸ்ரீ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தூத்துக்குடி மக்களவை உறுப்பினரும் திமுக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று வணிக வளாகத்தையும், உணவகத்தையும் திறந்தைவைத்தார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது: இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிப்போருக்கு தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை தொடர்ந்து அறிவித்து செயல்படுத்தி வருகிறது. அவர்களுக்கு நிரந்தர வீடுகள் கட்டும் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. மேலும், சுயசார்பை மேம்படுத்த திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான சிறப்பு நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு ஒரு சிறப்பு திட்டமாக இம்மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களை ஒருங்கிணைத்து சாதனைப் பூக்கள் என்ற உணவு உற்பத்திக் குழுவை உருவாக்கி, அதன் மூலம் இந்த வணிக வளாகத்தில் இலங்கைத் தமிழர் பாரம்பரிய உணவகம் திறக்கப்பட்டுள்ளது. உணவகம் அமைக்க சிறப்பு திட்டம் ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம், ஐ. நா. சபையின் அகதிகள் அமைப்பு ஆகியவற்றின் உதவியோடு செயல்படுத்தப்படுகிறது.

ஹிந்தியைக் கொண்டு வந்து தமிழையும், தமிழர்களையும் அழிக்க நினைப்போர் யார் என தமிழக மக்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை மனசாட்சியோடு பேசவேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.(ஐ)

# புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து மத்திய அரசிடம் வலியுறுத்து!

புதுச்சேரி, நவ. 02

மாநில மக்களின் நலனை கருத்தில் கொண்டு மத்திய அரசாங்கம் புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என முதல்வர் ரங்கசாமி வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி விடுதலை நாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதன்போது உரையாற்றிய அவர், "எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற இந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறக் கூடிய பல்வேறு திட்டப் பணிகளை நல்ல முறையில் வெகு சிறப்பாக நிறைவேற்றியுள்ளது. புதுச்சேரி மாநிலத்தின் உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு 2020-21இல் சுமார் ரூ.35 ஆயிரம் கோடியாக இருந்தது. இது 2021-2022 இல் ரூ.37 ஆயிரம் கோடியாக உயர்ந்தது. நடப்பு நிதியாண்டியில் சுமார் ரூ.39 ஆயிரம் கோடியாக உயரும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் புதுச்சேரி மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளாக தனிநபர் வருமானமும் உயர்ந்துள்ளது.

புதுச்சேரி பகுதிகளுக்கிடையே தமிழகப் பகுதிகளும் இடையிடையே வருவதால் ஒரு பொதுவான தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது. எனவே, வடக்கே மரக்காணம், தெற்கே கடலூர் வரையிலும், காரைக்காலில் தொடங்கி நாகப்பட்டினம் வரையிலும் முழுமையான அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளுமாறு தேசிய கடலோர ஆய்வு மையத்தை எனது அரசு கேட்டுள்ளது.

கடற்கரை சுற்றுச்சூழலைப் பாதிக்காமலும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் வகையிலும் ஒரு விரிவான கடற்கரை மேலாண்மைத் திட்டத்தை அந்த நிறுவனம் தயாரித்து அளிக்க உள்ளது. மத்திய புவி அறிவியல் மையம் அளிக்கும் அத்திட்டத்தை புதுச்சேரி அரசு விரைவாக நிறைவேற்றி மீனவர்களின் நலனைப் பாதுகாக்கும். புதுச்சேரி மாநில மக்களின் நலனை கருத்தில் கொண்டு மத்திய அரசு புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்க வேண்டும் என்று இந்நாளில் கேட்டுக்கொள்கிறேன்." என்றார்.

# இழந்த உரிமைகளை மீட்க உறுதியேற்போம்

## பா. ம. க. வலியுறுத்து

சென்னை, ஒக். 02

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது நாம் அடைந்ததை விட இழந்தது அதிகம். நாம் இழந்த உரிமைகள் உள்ளிட்ட அனைத்தையும் மீட்டெடுக்க உறுதியேற்போம் - இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் மருத்துவர் ராமதாஸ் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில்,

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டு, இன்றைய தமிழ்நாடு உருவாக்கப்பட்ட நாளான நவம்பர் ஒன்றாம் தேதி தான் நமக்கு தமிழ்நாடு நாள். இந்த நாளில் தமிழ் நாட்டு மக்களுக்கும் தமிழ் உணர்வாளர்களுக்கும் எனது தமிழ்நாடு நாள் நல்வாழ்த்துகள்.

மொழிவாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட போது நாம் அடைந்ததை விட இழந்தது அதிகம். அதுதான் தமிழ்நாட்டுக்கு வெளியில் உள்ள தமிழர்கள் அநீதிகளை எதிர்கொள்வதற்கும், தமிழகத்தின் பல உரிமைகள் பறிபோகவும் காரணமாகும். நாம் இழந்த உரிமைகள் உள்ளிட்ட அனைத்தையும் மீட்டெடுக்க உறுதியேற்போம்.

தமிழ்நாட்டின் இன்றைய நிலப்பரப்பு தமிழர்களின் மாநிலமாக 1.11.1956 அன்று நடைமுறைக்கு வந்த நிலையில், அதற்கு தமிழ்நாடு என்ற பெயரை அறிஞர் அண்ணா 1969ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி தான் சூட்டினார். அந்த நாளையும் அதற்குரிய சிறப்புடன் கொண்டாட அரசு முன்வர வேண்டும் - என்றார்.

# மக்களின் பிரச்னை தீர்க்க ஓரணியில் திரண்டு பல்குழல் எறிகணைகளாக செயல்படவேண்டும்

## மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, நவ. 02

தேர்தல்களுக்கு அப்பால், நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் பொது பிரச்சினைகள் தொடர்பில் மாற்று கட்சியினருடன், குறைந்தபட்ச பொது வேலைதிட்டம் என்ற அடிப்படையில் பல்குழல் ஏறிகணைகளாக செயற்பட வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

இனத்தின், சமூகத்தின், நாட்டின் பொது பிரச்னைகள், சவால்கள், இலக்குகள் தொடர்பில் மாறுபட்ட கட்சி தலைவர்கள் ஒன்றாக அமர்வது, பேச்சுகளை நடத்துவது, முற்போக்கான கலாச்சாரம். இது தான் பொது நோக்கில் இணைந்து செயற்படுவது என்பதாகும். இணைந்து செயற்படுவது என்பது எப்போதும் தேர்தலை இலக்கு வைத்த செயற்பாடு என்பது மட்டும்தான் என்ற சம்பிரதாயத்தில் இருந்து நாம் வெளியே வர வேண்டும்.

பொது விடயங்களில் ஒன்று சேர வேண்டும் என்ற விடயத்தில், சிங்கள அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், சிங்கள மக்கள், தமிழ் பேசும் அரசியல்வாதிகளை விட, தமிழ், முஸ்லிம் கட்சிகளை விட கணிசமாக முற்போக்காக இருக்கிறார்கள். நாமும் அந்த முற்போக்கான கலாசாரத்தை உள்வாங்க வேண்டும்.

நமது கட்சிகளுக்கு வெளியே பெரும்பான்மை அரசியல்வாதிகளுடனும் பொது விடயங்களில் ஒன்றாய் அமர்ந்து உரையாட நாம் தயங்குவதில்லை. தீபாவளி தினத்தில் காலையில் எதிரணி தலைவருடனும், மாலையில் நாட்டின் ஜனாதிபதியுடனும் அமர்ந்து நமது மக்களின் விவகாரங்களை உரையாட தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருக்கு முடிகின்றது என்றால் அது கூட்டணிக்கு உரிய அங்கீகாரத்தையே காட்டுகிறது.

எல்லா கூட்டு அமர்வுகளும் தேர்தல் கூட்டுகள் என்றும், எல்லா சந்திப்புகளும் அமைச்சரவையில் இடம் பிடிக்க என்றும், எடுத்த எடுப்பிலேயே முடிவு செய்து ஆரம்பிக்கக்கூடாது. அப்படி ஆரம்பித்தால், ஆரம்பித்த வேகத்திலேயே அவை முடிவுக்கு வந்து விடும். தேர்தல்கள் குறிப்



பிட்ட வேளைகளில் நடைபெறும். தேர்தல் இல்லாத பணியாற்ற வேண்டிய காலங்களே அதிகம். ஆகவே தேர்தல்களுக்கு அப்பால், நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் பொது பிரச்சினைகள் தொடர்பில் மாற்று கட்சியினருடன், குறைந்தபட்ச பொது வேலைதிட்டம் என்ற அடிப்படையில் பல்குழல் ஏறிகணைகளாக செயற்பட வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி இப்போது, ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் ஒரு பிரதான பங்காளி கட்சி. ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் வேறு தமிழ் கட்சிகளை உள்வாங்குவது, மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி, தேர்தல் நோக்குகளில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் கூட்டு சேருவது, தேர்தல் கூட்டணிகள் அமைப்பது என்பவற்றை தேர்தல் வரும் போது நிச்சயமாக பேசலாம். நமது மக்களின் பிரதிநிதித்துவங்களை அதிகரிக்கலாம்.

இன்று தேர்தல் கூட்டணி பற்றி, இ.தொ.காவுடன் நாம் பேசவில்லை. அதேவேளை தென்னிலங்கை தமிழ்க் கட்சிகள் ஒரு கூட்டணிக்குள் வர வேண்டும் என்று எவரும் எமக்கு அழுத்தம் தரவும் இல்லை. ஏற்கனவே தமிழ் முற்போக்கு கூட்டணி தயாரித்துள்ள, மலையக தமிழர் தேசிய அரசியல் அபிலாஷை ஆவணம் இ.தொ.காவிடம் தரப்பட்டுள்ளது. அந்த ஆவணம் மூலம் நமது மக்கள் இந்நாட்டின் முழுமையான குடிமக்களாக ஏற்கப்பட வேண்டும் என்பதை நாம் தர்க்கரீதியாக கோரியுள்ளோம்.

தேசிய அரசியல் அபிலாஷை ஆவணத்தை ஏற்றுக் கொள்வதாக அதிகாரபூர்வமாக எழுத்து மூலம் எமக்கு அறிவிக்கவிக்கும், எல்லா கட்சிகளுடனும் சேர்ந்து, அதை பொது ஆவணமாக கொண்டு, அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு தரப்பினரிடமும் நாம் கூட்டாக எடுத்து சென்று கலந்துரையாடலாம். இதுவே இன்றைய காலத்தில் நாம் செய்யவேண்டிய மிக முக்கியமான பணி என நான் நம்புகிறேன் - என்றார். (அ)

## பைசர் இனி இல்லை!

கொழும்பு, நவ. 02

பொதுமக்கள் நேற்று முதல் பைசர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியாது என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்பட்ட பைசர் தடுப்பூசிகள் நேற்று முன்தினத்துடன் காலவதியானமையே இதற்கான காரணம் என அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. கோவிட்-19 பரவக் கூடிய அதிக அவதானமிக்க 60வய துக்கு மேற்பட்ட 27 லட்சம் பேர் உள்ளனர். எனினும், இரண்டு இலட்சம் பேரே பைசர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.

காலாவதியான பைசர் தடுப்பூசிகளை விரைவில் அழிக்க நடவடிக்கை எடுக்க வுள்ளதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றைய தினம் கொவிட்-19 தொற்று றுதியான 17 பேர் அடையாளம் காணப்பட்டதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இதுவரை கோவிட்-19 தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 71 ஆயிரத்து 70 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன் கொவிட்-19 காரணமாக நேற்று முன்தினம் ஒரு மரணம் பதிவாகியுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## கல்வி முறைமையை திருத்துவதற்கு ஏற்பாடு

கொழும்பு, நவ. 02

நாட்டில் கல்வி முறையை மாற்றுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

கல்வி முறையில் மாற்றம் தொடர்பான திருத்தங்கள் 6 பகுதிகளின் அடிப்படையில் நடைமுறைப்படுத்த எதிர் பார்க்கிறோம்.

கல்வி சீர்திருத்தத்தை முன்னெடுப்பதை விட, இன்று நாம் மாற்றத்திற்கு செல்ல வேண்டும். கல்வி முறை மாற்றத்தை 6 பகுதிகளின் அடிப்படையில் திருத்த திட்டமிட்டுள்ளோம். அதை முதலில் தொடங்க உள்ளேன். எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் நிர்வாகத்தில் கல்வி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இல்லையெனில், நாம் திறனை வளர்த்துக் கொள்ள முடியாது - என்றார். (அ)

## புடைவையைவிட இலகுவான ஆடை கோரும் ஆசிரியர்கள்!

கொழும்பு, நவ. 02

அரச சேவையின் கௌரவத்தை பேணும் வகையில் அரச உத்தியோகத்தர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள ஆடை தொடர்பான சுற்றறிக்கையை ஆசிரியர்களுக்கும் அமுல்படுத்த வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு அதிக விலை கொடுத்து புடைவைகளை (சேலை) வாங்குவதில் சிக்கல் நிலவி வருவதாகவும், போக்குவரத்து சிரமம் காரணமாக ஆசிரியர்கள் பலர் சைக்கிள். மோட்டார் சைக்கிள்களில் பாடசாலைக்கு வருவதாகவும் அந்த சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

புடைவை அல்லது ஒசரியைவிட இலகுவான உடையை அணிவதன் மூலம் ஆசிரியர்களால் மாணவர்களை கையாள்வதில் திறமையாக செயல்பட முடியும் என்றும் அவர் கூறினார். (அ)

## சிற்றுண்டிகளின் விலை குறைகிறது



கொழும்பு, நவ. 02

சிற்றுண்டிகளின் விலை 10 வீதத்தினால் குறைக்கப்படவுள்ளதாக சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சைனிஸ் ரோல், பரோட்டா, முட்டை ரொட்டி, மற்றும் மரக்கறி ரொட்டி ஆகிய வற்றின் விலைகளே இவ்வாறு 10 ரூபாவினால் குறைக்கப்படவுள்ளது.

அதற்கமைய, பால் தேநீரின் புதிய விலை 100 ரூபாவாகவும், சாதாரண தேநீரின் விலை 30 ரூபாவென வும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் குறித்த விலைக் குறைப்பு அமுலுக்கு வருமெனவும் அந்த சங்கம் அறிவித்துள்ளது. (அ)

## மண்மேடு சரிந்து முதியவர் மரணம்

கொழும்பு, நவ. 02

பண்டாரவளை-ஹம்பராவ பகுதியில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹம்பராவ பகுதியில் வீடொன்றின் மீது நேற்று முன்தினம் இரவு இவ்வாறு மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த வீட்டின் உரிமையாளரும் உறவுக்கார பெண்ணொருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், 73 வயதான வீட்டின் உரிமையாளர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

## தாக்குதலுக்கு இலக்காகிய பொலிஸ் சார்ஜன்ட் மரணம்

கொழும்பு, நவ. 02

அநுராதபுரம் கெப்பிற்றிகொல்லாவ, ரம்பகெப்புவெவ பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது தாக்குதலுக்குள்ளான பொலிஸ் சார்ஜன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்டின் சடலம் மதவாச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதான பொலிஸ் சார்ஜன்டே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கெப்பிற்றிக்கொல்லாவ பகுதியில் காட்டு யானை தாக்கி நேற்று முன்தினம் மாலை ஒருவர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து வீதியை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலுக்கு அமைய, கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர் அங்கு சென்றுள்ளனர்.

இதன்போது ஒன்று திரண்ட மக்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்தூவ குறிப்பிட்டார்.

தாக்குதலுக்கு இலக்காகிய பொலிஸ் அதிகாரியை மீட்பதற்காகவே வானை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# தேயிலை தொழிற்துறையை நவீனமயப்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 02

போட்டிமிகுந்த சந்தையில் நிலைத்திருக்க வேண்டுமாயின் தேயிலை தொழிற்துறையை நவீனமயப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பொருளாதாரத்தில் இது மிகவும் இன்றியமையாதது எனக்கூறிய ஜனாதிபதி, ஆரம்பத்தில் தேயிலை தொழிற்துறையில் கிடைத்த வெற்றியை மீண்டும் உறுதிசெய்ய வேண்டுமென்றும் சுட்டிக்காட்டினார்.

பத்தரமுல்லையில் 30ஆம் திகதி நடைபெற்ற இலங்கை தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் 32 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி அங்கு மேலும் உரையாற்றுகையில்-

தேயிலை உற்பத்தித் துறையில் கடந்து வந்த இக்கட்டான நிலைமைகள் தொடர்பில் அதன் தலைவர் கூறியிருந்தார்.

இந்த நெருக்கடியுடன் எமது பொருளாதாரம் தடைப்பட்டுள்ளது. பணவீக்கம், நிதி நெருக்கடி ஆகிய அனைத்தும் எமது பொருளாதாரத்திற்கு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியுள்ளன. அதிலிருந்து மீள வேண்டும்.

முதலாவதாக நாம் எம்மிடமுள்ள வெளிநாட்டுக் கையிருப்பை தக்க வைத்துக் கொள்வதுடன் இறக்குமதியை மட்டுப்படுத்த வேண்டும். அதன் ஊடாக, எம்மால் எரிபொருள், உரம் மற்றும் மருந்து ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

வருமானம் இல்லாமல் போனதால் எமக்கு கட்டணங்களைச் செலுத்துவதற்கும் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் முடியாமல் போயுள்ளது.

எனினும் 1.7 மில்லியன் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்கவும் கடன்களை மீளச் செலுத்தவும் வேண்டியுள்ளது என்பதை நாம் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும்.

வங்குரோத்தடைந்து நிலையை மாற்றுவதற்கு அவசியமான நகர்வுகளை முன்னெடுத்துள்ளோம் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

2019 ஆம் ஆண்டு வரை எம்மிடம் ஒரு திட்டம் இருந்தது. எனவே நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் ஆழமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும். அதனை தவிர எம்மிடம் வேறு தெரிவு எதுவும் இல்லை.

இவ்வருடம் எமது பொருளாதார வளர்ச்சி வீதம் 8 சதவீத மறைப்பெறுமானமாக அமைந்திருக்கிறது. கடந்த வருடம் மறைப்பெறுமானத்திலே நாட்டின் வளர்ச்சி வீதம் காணப்பட்டது. அடுத்த வருடம் இது 3 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

உலகப் பொருளாதாரம் மிகச் சிறப்பாக இருக்குமென அனைவரும் எதிர்பார்த்திருந்த நிலையில் இது ஒப்பீட்டளவில் மிக மோசமாகவே இருக்குமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது கவலையளிக்கும் விடயமாகும். இதனால் ஐரோப்பியா மற்றும் ஏனைய நாடுகளில் அதிகரித்து வரும் பணவீக்கத்தால் வாழ்க்கைச் செலவும் அதிகரிக்கும். இது ஆடை, தேயிலை, கோப்பி ஆகியவற்றின் ஏற்றுமதியில் வீழ்ச்சியை ஏற்படுத்தி பெரும் தாக்கத்தை உண்டுபண்ணும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் - என்றார். (அ)

# ஆட்சி அதிகாரம், ஜனாதிபதி பதவி இரண்டையுமே இழக்க நேரிடலாம்!

## அரசுக்கு உதய கம்மன்பில எச்சரிக்கை

கொழும்பு, நவ. 02

**''உள்ளாட்சிசபைத் தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முற்படுமானால், பாராளுமன்ற அதிகாரம் மற்றும் ஜனாதிபதி பதவி ஆகிய இரண்டையும் இழக்க நேரிடும்.''**

-இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் உதய கம்மன்பில மேலும் கூறியவை வருமாறு,

தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் வீதியில் இறங்குவோம் என 16 எதிர்க்கட்சிகளும் கூட்டாக அறிவித்துள்ளன.

நாட்டில் மக்கள் புரட்சி வெடித்தது. கொந்தளிப்பு நிலை இன்னும் முழுமையாக அடங்கவில்லை. ஓரிரு மாதங்கள் மக்கள் அமைதியாக உள்ளனர். எனவே, அவர்களை மீண்டும் வீதிக்கு இறக்கும் வேலையை அரசாங்கம் செய்யக்கூடாது.

எனவே, உள்ளாட்சி தேர்தலை பிற்போடுவதற்கு - அல்லது அங்கு ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கு ஆசைப்பட்டால், நாட்டில் மீண்டும் குழப்பம் ஏற்படும். மக்கள் கொந்தளிப்பார்கள். நாடாளுமன்ற அதிகாரம் மற்றும் ஜனாதிபதி பதவி இரண்டையும் இழக்கும் அபாயம் ஏற்படும்-என்றார். (அ)

# தேசிய அடையாள அட்டைக்கு விநியோக கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, நவ. 02

தேசிய அடையாள அட்டையை விநியோகிப்பதற்கான கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன.

முதல் தடவையாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்ப படிவத்திற்கு 200 ரூபா கட்டணத்தை செலுத்தவேண்டும் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க தெரிவித்தார்.

15 வயது நிரம்பிய மாணவர்கள், முதல் தடவையாக தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய 100 ரூபா கட்டணமே நேற்று முதல் அமுலாகும் வகையில் 200 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதென அவர் கூறியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதியை பெற்றுக் கொள்வதற்காக இதுவரை காலம் அறவிடப்பட்ட 500 ரூபா கட்டணம் நேற்று முதல் 1,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தேசிய அடையாள அட்டையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இதுவரை 250 ரூபா என்ற ரீதியில் சேவைக் கட்டணம் அறவிடப்பட்டதுடன், நேற்று முதல் இந்த சேவைக்கு 500 ரூபா கட்டணம் அறிவிடப்படும் என ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் கூறியுள்ளார்.

தேசிய அடையாள அட்டைக்குரிய நிழற்படத்தை பெறுவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் புகைப்பட கலைக்கூடங்களை பதிவு செய்வதற்கான கட்டணம் 15,000 ரூபாவாக திருத்தப்பட்டுள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக்க சுட்டிக் காட்டியுள்ளார்.

தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கான சேவைக் கட்டண திருத்தங்கள் நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு கடந்த 14ஆம் திகதி வர்த்தமானியில் அறிவித்திருந்தது. (அ)

# ஆட்சி அதிகாரத்தில் இளைஞர்களை அதிகமாக உள்ளீர்க்கும் தனிநபர் பிரேரணை முன்வைப்பு

கொழும்பு, நவ. 02

நாட்டில் தீர்மானம் மேற்கொள்வதற்கு இளைஞர்களுக்கு அதிக சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும் எனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை வலுப்படுத்தும் வகையிலான தனிநபர் பிரேரணையை பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தும் விசேட சந்திப்பு நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

262 ஆவது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அதிகார கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்காக இந்த தனி நபர் பிரேரணை சட்டமூலமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்டமூலத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முதலாவது மற்றும் இரண்டாவது வேட்புமனுப் பட்டியல்களில், குறைந்தது 25 வீத இளைஞர் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் சேர்க்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இங்கு தெரிவித்தார்.

இளைஞர்களின் அமைதியின்மையைக் கண்டறிவதற்காக 1990 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய, ஜனநாயகப் பிரதி நிதித்துவ முறைமைகளில் இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்குவதன் முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதற்கமைய 1990 ஆம் ஆண்டில், உள்ளூராட்சி மன்ற சட்டத்தில் திருத்தம் ஒன்றைச் செய்ததன் மூலம், அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் உள்ளூராட்சி வேட்புமனுப் பட்டியல்களைத் தயாரிக்கும்போது 40 வீத வாய்ப்புகளை இளைஞர்களுக்கு உறுதிப்படுத்தும் விதிகளை அறிமுகப்படுத்தியதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் 25 சதவீத பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அது தொடர்பான திருத்தத்தில் இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயம் என்ற நிபந்தனை வலுவிழக் கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த சுட்டிக்காட்டினார்.

அந்த வாய்ப்பை இளைஞர் சமூகத்திற்கு மீண்டும் வழங்குவதன் மூலம் இளைஞர்களின் பங்களிப்பை உறுதிப்படுத்தவும் ஜனநாயகத்தை மேலும் வலுப்படுத்தவும் தனது முன்மொழிவு உதவும் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார். (அ)

# பால்மா விநியோகத்தில் உள்ள பிரச்னைகள் குறித்து ஆராய்வு

கொழும்பு, நவ. 02

பால்மா மற்றும் திரவப் பாலை சந்தைக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ மற்றும் முன்னணி இறக்குமதியாளர்கள் மற்றும் பால்மா விநியோகஸ்தர்களுக்கு இடையில் நேற்று முன் தினம் வர்த்தக அமைச்சில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

நிலவும் சூழ்நிலைக்கு மத்தியில் பால்மா பொருட்கள் தொடர்பான பிரச்னைகள் குறித்து அமைச்சர் கேட்டறிந்தார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சந்தையில் பால்மா விநியோகத்தை அதிகரிக்க அல்லது திறந்த கணக்கு முறையின் கீழ் பால்மாவை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊடாக டொலருக்குரிய சலுகைகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

வெண்ணெய், யோக்கட் மற்றும் திரவ பால் இறக்குமதி தொடர்பான தற்போதைய நிலைமை குறித்தும் கலந்துரையாடப்பட்டதுடன், திரவ பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கு வர்த்தக அமைச்சின் கீழ் உள்ள அரச அமைச்சுகள் ஊடாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார். (அ)





# போதைப் பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணம், தெல்லிப்பளை மகாஜன கல்லூரியில் போதைப் பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் பியந்த வீரசூரிய தலைமையில் நேற்று முன் தினம் காலை கல்லூரி பிரதான மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

அதன் போது, போதைப் பொருளினால் ஏற்படும் விளைவுகள் குறித்தும், போதைப் பொருள் பாவனையில் இருந்து எவ்வாறு மீள்வது என்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன், போதைப் பொருள் பாவனை மற்றும் வியாபாரம் தொடர்பில் தகவல்கள் தெரிந்தால், பொலிஸாருக்கு அறிவிக்குமாறும், பெரும்பாலான குற்றங்கள் போதைப் பொருள் பாவனையால் செய்யப்படுவதாகவும், அதனால் போதைப்பொருளுக்கு எதிராக மாணவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

இந்நிகழ்வில், மத குருமார்கள், யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் விஜித குணரட்ன, பாடசாலை அதிபர், ஆசிரியர்களும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# பொதுஜன பெரமுனவில் உள்ள பலர் மீண்டும் சு.கவில் இணைய ஆர்வம்!

## கூறுகிறார் துமிந்த திஸாநாயக்க

கொழும்பு, நவ. 02

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களே தற்போது பொதுஜன பெரமுனவில் உள்ளனர். அவ்வாறானவர்களில் பெரும்பாலானோர் மீண்டும் எம்முடன் இணைய விருப்பம் தெரிவித்துள்ளனர். சகல பேதங்களையும் துறந்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக பலத்தை அனைவரும் வழங்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

சுதந்திர கட்சியின் மத்திய குழு கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் கருத்து வெளியிடுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

இதற்கு முன்னர் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்கு எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆனால் இம்முறை அழைப்பு விடுக்கப்பட்டது. முந்தைய கலந்துரையாடல்களுக்கு ஏன் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று நான் கேட்கவில்லை.

தற்போது சுதந்திர கட்சிக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.



சுதந்திர கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களே தற்போது பொதுஜன பெரமுனவில் உள்ளனர்.

பொதுஜன பெரமுனவிலுள்ள பெரும்பாலானவர்கள் மீண்டும் சுதந்திர கட்சியுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். எனவே சுதந்திர கட்சிக்குள் தற்போது காணப்படுகின்ற இருவேறு நிலைப்பாடுகளை எம்மால் ஒன்றிணைக்க முடியும்.

அனைவரையும் ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான செயற்திட்டத்திற்கு சுதந்திர கட்சி தலைமைத்துவத்தை வகிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். நாட்டின் பிரச்சினைக்கு தீர்வாகவே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தேசிய அரசாங்கத்தை பரிந்துரைத்தது.

எனவே தினந்தோறும் ஈடுபடும் விமர்சன அரசியலுக்கு அப்பாற் சென்று அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை எவ்வாறு மீளக் கட்டியெழுப்புவது என்பதில் அவதானம் செலுத்த வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் கூட்டணி அரசாங்கமே இலங்கையை அதிகம் ஆட்சி செய்துள்ளது. எனவே நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் ராஜபக்ஷக்கள் மீது குற்றஞ்சாட்டுவதைப் போன்றே, அவர்களை பாதுகாத்த மீண்டும் மீண்டும் அவர்களை தெரிவு செய்து ஆட்சியமைத்த எம் அனைவருக்கும் பொறுப்பு காணப்படுகிறது.

எவ்வித பேதமும் இன்றி நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான பலத்தை அனைவரும் வழங்க வேண்டும். நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் கட்சியின் தீர்மானங்களுக்கு அமையவே செயற்பட்டுள்ளோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கட்சியிலிருந்து விலகி பிரிதொரு கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிடவில்லை. அர சாங்கத்தினால் முன்னெடுக் கப்படும் சிறந்த வேலைத்திட் டங்களுக்கு நாம் ஒத்துழைப் புக்களை வழங்குவோம்-என்றார். (அ)

# மூளைச்சாவடைந்த நபரின் உடல் உறுப்புக்கள் தானம்!

கொழும்பு, நவ. 02

மூளைச்சாவு அடைந்த நபர் ஒருவர், பதுளை பொது வைத்தியசாலையிலிருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அவரது முக்கிய உறுப்புகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாதுகாப்பாக விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டார்.

இலங்கை விமானப்படை மற்றும் சுகாதார அமைச்சுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி, நேற்று முன் தினம் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதற்காக இலங்கை விமானப்படையின் பெல் 412 உலங்கு வானூர்தி அம்புலன்ஸாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டது.

ஹசலக, மஹாஸ்வெத்தும கிராமத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான எம்.ஜி.சமிந்த (வயது-48), ஹசலக்க பிரதேச சபையின் சாரதியாக கடமையாற்றிவந்தார். அவர், பணி முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது, கடந்த 26 ஆம் திகதி பேருந்திலிருந்து கீழே விழுந்து விபத்துக்குள்ளானார்.

விபத்தில் தலையில் பலத்த காயமடைந்த குறித்த நபர் மஹியங்கனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் பதுளை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டார். எவ்வாறாயினும் அவர் மூளை கடுமையாக பாதிக்கப்பட்டு மூளைச்சாவடைந்தமையால், அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய வைத்தியர்கள் அனுமதி கோரியிருந்தனர்.

இந்நிலையில் மருத்துவமனையில் உள்ள அவரது உடல் உறுப்புகளை தானம் செய்ய, அவரது மனைவியும் இரண்டு பிள்ளைகளும் முடிவு செய்ததாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



அதன் பிரகாரம், பதுளை பொது வைத்தியசாலையின் வைத்திய குழுவினர் சம்பவம் தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு அறிவித்து, தேவையான ஏற்பாடுகளை தயார் செய்தனர்.

அதனையடுத்து, விமானம் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நோயாளி கொண்டு செல்லப்பட்டார்.

அவரது இதயம் வெளிநாட்டு வைத்தியர் குழுவின் உதவியுடன் மற்றுமொரு நோயாளிக்கு பொருத்தப்பட உள்ளது. அத்துடன், அவரது நுரையீரல் மற்றும் கல்லீரல் கண்டி வைத்தியசாலையில் உள்ள நோயாளி ஒருவருக்கும், இரண்டு சிறுநீரகங்களும் பதுளை பொது வைத்தியசாலையில் உள்ள இரண்டு நோயாளர்களுக்கும் பொருத்தப்பட உள்ளதாக பதுளை பொது வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

நோயாளியின் முக்கிய உடல் உறுப்புகள் அகற்றப்பட்டதன் பின்னர் உடல் பதுளை பொது வைத்தியசாலைக்கு மீண்டும் கொண்டு வரப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் குடும்ப உறுப்பினர்களிடம் ஒப்படைக்கப்படும் என வைத்தியர்கள் தெரிவித்தனர். (அ)

# மருந்துப் பொருட்களின் விலைகள் மேலும் உயர்வு

இறக்குமதி செய்யப்படும் சில வகை மருந்துப் பொருட்களின் விலைகள் மூன்று மடங்காக உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளுக்கு விலைப் பொறிமுறை அறிமுகம் செய்யப்பட வேண்டுமென தனியார் மருந்தக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சந்தன கல்கந்த கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

விலைச்சூத்திரம் ஔடத கட்டுப்பாட்டு சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இது குறித்து அதிகாரிகளை தெளிவுப்படுத்திய போதிலும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

தற்போது மருந்துகளின் பெயர்களினால் அடையாளப் படுத்தப்படும் 1200 மருந்து வகைகள் காணப்பட்டாலும் 100 மருந்து வகைகள் மட்டுமே விலைப் பொறிமுறைமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கம் அனுமதி வழங்கியதன் அடிப்படையில் முறை 29 மற்றும் 40 வீதம் என மருந்து பொருட்களின் விலைகள் உயர்வடைந்திருந்தன.எனினும் சில மருந்து வகைகளுக்கு விலைப் பொறிமுறைமை இல்லாத காரணத்தினால் உயர்வடைந்துள்ளது.

இறக்குமதியாளர், மொத்த வியாபாரி மற்றும் சில்லறை வியாபாரி ஆகிய தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் விலைப் பொறிமுறைமை அறிமுகம் செய்யப்பட வேண்டும்-என்றார். (அ)

# ரயில் தடம் புரள்வு

கொழும்பு, நவ. 02

கண்டி முதல் மாத்தறை வரை சேவையில் ஈடுபடும் கடுகதி ரயில் நேற்று தடம் புரண்டது.

கொழும்பு மற்றும் மருதானைக்கு இடையில் இந்த ரயில் தடம் புரண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் ரயிலை தடமேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)



# குஜராத் மோர்பி பாலம் இடிந்து விபத்து

குஜராத் மாநிலத்தில் தொங்கு பாலம் இடிந்து விழுந்ததில் இதுவரை 141 பேர் உயிரிழந்துள்ளதாக ராஜ்கோட் காவல்துறை தலைவர் (ஐஜி) அஷோக் யாதவ் தெரிவித்துள்ளார்.

குஜராத்தின் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்க்வி சம்பவ இடத்தை பார்வையிட்டார்.

உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

மீட்புப் பணியில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர், விமானப் படை, ராணுவம், கடற்படை ஆகியோர் ஈடுபட்டனர்.

இதுவரை 177க்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இரவில் மீட்புப் பணிகளை தொடர்வது மிக கடினமாக இருந்ததாக மீட்புக் குழுவினர் தெரிவித்தனர். நேற்று முன்தினம் காலை அருகாமை பகுதிகளில் உள்ள 200 பேர் மீட்புப் பணியில் இணைந்தனர்.

ஆற்றின் சேறு கலந்த நீரில் மீட்புப் பணிகளை மேற்கொள்வது கடினமாக இருந்ததாக மீட்புக் குழுவை சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

**நடந்தது என்ன?**

குஜராத்தின் மோர்பி நகரில் உள்ள மச்சு ஆற்றுக்கு மேல் இருந்த பாலம் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கானோர் மூழ்கினர்.

தீபாவளி பண்டிகையை கொண்டாடி கொண்டு இருந்ததால் பாலத்தில் அதிகளவிலான மக்கள் இருந்தனர். இந்த பாலம் ஞாயிறு மாலை 6.40 மணியளவில் இடிந்து விழுந்தது.



இருள் சூழ்ந்ததால் தண்ணீரில் சிக்கியவர்களைக் காப்பாற்ற பார்வையாளர்கள் முயற்சிக்கும் போது காட்சிகளை வீடியோக்கள் காட்டுகின்றன.

இந்தியக் குடியரசுத் தலைவர் திரவுபதி மூர்முவும் தனது கவலையைத் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்காக பிரார்த்தனை செய்வதாக அவர் கூறியிருக்கிறார்.



மீட்புப் பணிகளில் உதவ அண்டை மாவட்டங்களில் இருந்து அவசர உதவியாளர்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

தேசிய பேரிடர் மீட்புப் படையின் இயக்குநர் அதுல் கர்வால், மூன்று குழுக்கள் சம்பவ இடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார். காந்தி நகரில் இருந்து இரண்டு குழுவும், பரோடாவில் இருந்து ஒரு குழுவும் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ட்விட்டரில் பதிவிட்டுள்ள மாநில முதல்வர் பூபேந்திர படேல் "மோர்பியில் தொங்கு பாலம் இடிந்து விழுந்தது வருத்தமளிக்கிறது. நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். காயமடைந்தவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய அறிவுறுத்தியுள்ளேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

"குழந்தைகளுக்கு தீபாவளி விடுமுறை என்பதால் பாலத்தை காண பலர் சுற்றுலாப் பயணிகளாக வந்திருந்தனர்" என சம்பவத்தை நேரில் பார்த்த சுக்ராம் ராயட்டர்ஸ் செய்தி முகமையிடம் தெரிவித்திருந்தார்.

"ஒருவர் மீது ஒருவர் என அனைவரும் கீழே விழுந்தனர். அதிக கூட்டம் இருந்ததால் பாலம் இடிந்து விழுந்தது," என அவர் தெரிவித்தார்.

பகுதியளவு நீரில் மூழ்கிய தொங்கு பாலத்தில் மக்கள் தொங்கிக்கொண்டிருப்பதை காணொளிகளில் பார்க்க முடிகிறது.

அந்த நேரத்தில் 400 பேர் கட்டடத்தில் இருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாலம் பழுதுபார்க்கப்பட்டதைத் தொடர்ந்து மீண்டும் திறக்கப்பட்ட சில நாட்களில் இது நடந்திருக்கிறது.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் குழந்தைகளாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

பாலம் இடிந்த நேரத்தில் அங்கு சுமார் 400 பேர் இருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மூன்று நாள் பயணமாக தனது சொந்த மாநிலமான குஜராத்திற்கு வந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோதி, "இந்த சோகத்தால் மிகவும் வருத்தமடைந்தேன்" என்று கூறினார்.

## இதுவரை 141 பேர் உயிரிழப்பு; 8 பேர் கைது

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்கு 5 நபர் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**நவீன தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டது**

தீபாவளிக்குப் பிறகு குஜராத்தி புத்தாண்டு அன்றுதான் இந்தப் புதிய பாலம் திறக்கப்பட்டது. மோர்பியில் உள்ள மச்சு ஆற்றின் மீது கட்டப்பட்ட இந்த ஊஞ்சல் பாலம் நவீன ஐரோப்பிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மோர்பிக்கு தனித்துவமான அடையாளத்தை வழங்கும் நோக்கத்துடன் கட்டப்பட்டது. மோர்பி நகரின் அதிகாரப் பூர்வ இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவலில், இந்த பாலம் பொறியியலின் அதிசயம் என்று விவரிக்கப்பட்டுள்ளது.

இந்த பாலம் 1.25 மீட்டர் அகலமும் 233 மீட்டர் நீளமும் கொண்டது. மச்சு ஆற்றில் உள்ள தர்பார்கர் அரண்மனை மற்றும் லக்திர்ஜி பொறியியல் கல்லூரியை இணைக்கிறது.

இந்த விபத்து குறித்து குஜராத் உள்துறை அமைச்சர் ஹர்ஷ் சங்வி கூறுகையில், "மாலை 6.30 மணியளவில் பாலம் இடிந்து விழுந்தது. அப்போது அங்கு 150 பேர் கூடியிருந்தனர்." என்றார். விபத்து குறித்து தகவல் கிடைத்ததும் தீயணைப்பு படையினர் 15 நிமிடங்களில் அங்கு வந்தனர். இதனுடன், கலெக்டர், மாவட்ட எஸ்பி, டாக்டர்கள் மற்றும் ஆம்புலன்ஸ்களும் அங்கு வந்தனர். தாமும் உடனடியாக சம்பவ இடத்திற்குச் செல்வதாக அவர் குறிப்பிட்டார்.

**தொங்கு பால விபத்து தொடர்பாக 8 பேர் கைது**

இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் 8 பேரை கைது செய்துள்ளனர். அவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்து வரப்பட்டுள்ளதாக காவல் கண்காணிப்பாளர் ராகுல் திரிபாதி தெரிவித்தார். இந்த விவகாரம் தொடர்பாக பொலிசார் புகார் பதிவு செய்துள்ளனர்.

இதுவரை 141 பேர் இந்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது. தற்போதும், பல்வேறு குழுக்கள் ஆற்றங்கரையில் முகாமிட்டு காணாமல் போனவர்களைத் தேடி வருகின்றனர்.

புஜ்ஜில் இருந்து 50 கடற்படை வீரர்களும் ஜாம்நகரில் இருந்து 60 கடற்படை வீரர்களும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மேலும், 33 ஆம்புலன்ஸ்கள், 7 தீயணைப்பு வாகனங்கள், ராஜ்கோட் மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்டத்தின் கிராமப்புறங்களில் இருந்து 30 மருத்துவர்கள், துணை மருத்துவ பணியாளர்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.



◆குஜராத் மாநிலம் மோர்பி என்ற இடத்தில் ஆற்றின் மீது இருந்த தொங்கு பாலம் இடிந்து விழுந்தது. நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

◆உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு 2 லட்ச ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு 50,000 ரூபாயும் பிரதமர் நிவாரண நிதியில் இருந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

◆விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 4 லட்சமும், காயமடைந்தவர்களுக்கு 50,000 ரூபாயும் வழங்கப்படும் என குஜராத் முதல்வர் பூபேந்திர படேல் அறிவித்துள்ளார்.

◆சுமார் ஒரு நூற்றாண்டு பழமை வாய்ந்த இந்த பாலம், பழுது நீக்கப்பட்டு சில நாள்களுக்கு முன்பு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டது.

**மோபிர் தொங்கு பாலத்தின் வரலாறு என்ன?**

இந்த பாலம் நூற்றாண்டு பழைமையானது. மோர்பியின் அரச காலத்தை நினைவூட்டும் விதமாக இந்த பாலம் இருந்தது.

மோர்பியின் மன்னர் சர் வாஜி தாகூர், நவீன ஐரோப்பிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு இந்த பாலத்தைக் கட்டினார்.

அந்த நேரத்தில் இதுவொரு கலை மற்றும் தொழில்நுட்ப அதிசயம் என்று அழைக்கப்பட்டது.

இந்த பாலம், 1879ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதியன்று மும்பையின் அப்போதைய கவர்னர் ரிச்சர்ட் டெம்பிளால் திறந்து வைக்கப்பட்டது.

ஈழநாடு



# தேசிய பிரச்னை தீர்வுக்கு அவசியமான மன்னிக்கும் பெருந்தன்மை

கலாநிதி ஜெகான் பெரேரா



நீண்டகாலமாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த எட்டு விடுதலை புலிகள் இயக்க கைதிகள் அரசாங்கத்தினால் விடுதலை செய்யப்பட்டிருப்பது எதிர்பாராத ஒன்று. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் அண்மைக்கால போராட்ட இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்களில் சமார் 4000 பேரை கைது செய்து தடுத்து வைத்தது என்றாலும் அவர்களில் பலர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஆனால், நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் தடுப்புக்காவலில் பல மாதங்களாக வாடுகிறார்கள். அவர்களை விடுதலை செய்யவேண்டும் அல்லது மன்னிப்பு வழங்கவேண்டும் என்று உள்நாட்டு மற்றும் சர்வ தேசிய மனித உரிமைகள் அமைப்புகளினால் விடுக்கப்படும் வேண்டுகோள்களுக்கு இதுவரையில் அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

குறிப்பாக, மாணவர் தலைவர் வசந்த முதலிகே மற்றும் மாணவர் இயக்கத் தலைமைத்துவத்தில் துடிப்பாக இயங்கும் இளம் புத்த பிக்குவான வண.கல்வேவா சிறிதம்ம தேரோவினது கைதும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான அவர்களது தடுப்புக்காவலும் அண்மையில் நாட்டின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கடுமையான கண்டனத்துக்குள்ளாகின. ஒரு அரச அமைப்பான மனித உரிமைகள் ஆணைக்குழு அதன் சுயாதீனத்தை மிகவும் சிறப்பாக வெளிப்படுத்தி செயற்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

விடுதலை புலிகள் இயக்கத்தின் எட்டு உறுப்பினர்களையும் அரசாங்கம் விடுதலை செய்திருப்பது வரவேற்கத்தக்கது. அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது தமிழ்ச்சமூகத்தினதும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தினதும் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வந்தது. அவர்களின் விடுதலை தேசிய நல்லிணக்கத்துக்கான ஒரு சூழலையும் உருவாக்கும். அவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும் என்று அவர்களின் குடும்பங்கள் ஆர்ப்பாட்ட இயக்கங்களை தொடர்ச்சியாக நடத்தி வேண்டுகோள் விடுத்துவந்த போதிலும், கேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் வலியுறுத்திய போதிலும் குறைந்தது முன்னைய நான்கு அரசாங்கங்கள் அதைச் செய்ததற்கு மறுத்தன.

விடுதலை செய்யப்பட்டிருப்பவர்களில் மூவர் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்கவை கொலை செய்ய முயற்சித்ததாக குற்றவாளிகளாக காணப்பட்டவர்கள். அந்த குண்டுத் தாக்குதலில் அவர் தனது ஒரு கண் பார்வையை இழந்தார். ஜனாதிபதி விக்கிரமசிங்க கைச்சாத்திட்ட மன்னிப்பின் மூலமாக அவர்களை விடுதலை செய்வதற்கு முன்னர் அரசாங்கம் திருமதி குமாரதுங்கவின் கருத்தையும் கேட்டு அவரது சம்மதத்தையும் பெற்றுக் கொண்டது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னை கொலை செய்ய முயற்சித்த விடுதலை புலிகள் இயக்க உறுப்பினரை மன்னித்து விடுதலை செய்ததைப் போன்று திருமதி குமாரதுங்கவும் தனது பெருந்தன்மையை வெளிக்காட்டினார். இனப் பிரச்சினையின் விளைவான உள்நாட்டுப் போரினால் சின்னாபின்னப்பட்ட நாட்டின் காயங்களைக் குணப்படுத்த அத்தகைய பெருந்தன்மை அவசியமாகிறது.

விடுதலை செய்யப்பட்ட அந்த 8 கைதிகளில் நால்வர் நீதிமன்றம் வழங்கிய தண்டனையையும் விட கூடுதல் காலம் சிறைவாசத்தை அனுபவித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் அதிர்ச்சி

**விடுதலை செய்யப்பட்ட அந்த 8 கைதிகளில் நால்வர் நீதிமன்றம் வழங்கிய தண்டனையையும் விட கூடுதல் காலம் சிறைவாசத்தை அனுபவித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் அதிர்ச்சி தரும் வகையில் ஒத்துக் கொண்டிருக்கிறது**

தரும் வகையில் ஒத்துக்கொண்டிருக்கிறது. “மூன்று கைதிகளுக்கு 30 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவர்கள் 22 வருடகாலம் சிறையில் இருந்துவிட்டார்கள். இன்னொரு கைதிக்கு 11 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் 14 வருடங்கள் சிறைவாசம் அனுபவித்துவிட்டார். 10 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதி 14 வருடங்கள் சிறையில் இருந்தார். ஐந்து வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட இரு கைதிகள் 14 வருடங்கள் சிறைக்குள் இருந்துவிட்டாரகள்” என்று ஜனாதிபதி செயலக அறிக்கை கூறுகிறது.

இது பாரதூரமான மனித உரிமை மீறலாக தோன்றுகிறது. இவ்வாறாக அவர்களை சிறையில் அடைத்து வைத்தவர்களின் அதிகார துஷ்பிரயோகம் சகித்துக் கொள்ள முடியாதது. அரசாங்கம் இது குறித்து விசாரணை நடத்தி இது எவ்வாறு நடந்தது என்பது குறித்து பாதிக்கப்பட்டவர்களுக்கும் தேசிய மற்றும் சர்வதேச சமூகங்களுக்கும் விளக்கம் அளிக்க வேண்டிய தேவை இருக்கிறது. நீதித்துறையின் நியாயாதிக்கத்துக்கு அப்பாற்பட்ட முறையில் இடம்பெற்றிருக்கும் இந்த சிறைவாசம் இலங்கையின் உரிமை மீறல்கள் தொடர்பில் ஜெனீவா போன்ற சர்வதேச மன்றங்களில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை நியாயப்படுத்துவதுடன் எந்தவிதமான நீதித்துறை ஆணையும் இன்றி இவ்வாறாக மேலும் எத்தனை பேர் சிறையில் இன்னமும் வாடுகிறார்கள் என்ற கேள்வியையும் கிளப்புகிறது.

பயங்கரவாத சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்துவதற்கு துஷ்பிரயோகம் செய்கின்ற சூழ்நிலையில் பாதிக்கப்படுகிறவர்களும் அவர்களின் குடும்பங்களும் எந்தளவுக்கு வலிமையற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதையும் அவர்கள் எதிர்நோக்கவேண்டியிருக்கின்ற அவலங்கைளையும் இந்த எட்டு விடுதலை புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கும் நேர்ந்த கதியின் மூலம் தெளிவாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

திருத்தியமைக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் இல.48 பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரிவு 9(1) இன் கீழ் எந்தவொரு நபரும் எந்தவொரு சட்டவிரோத நடவடிக்கையுடன் தொடர்புபட்டிருப்பதாக அமைச்சர் நம்புவதற்கு அல்லது சந்தேகிப்பதற்கு காரணம் இருக்கும் பட்சத்தில் முதல் சந்தர்ப்பத்தில் மூன்று மாதங்களுக்கும் மேற்படாத காலப்பகுதிக்கு அந்த நபரை தடுப்புக்காவலில் வைக்க முடியும். அந்த நபர் தடுத்துவைக்கப்பட்டிருக்க வேண்டிய இடம், சூழ்நிலைகள் எல்லாம் அமைச்சரினால் தீர்மானிக்கப்படலாம். அத்தகைய உத்தரவை நேரத்துக்கு நேரம் மூன்று மாதங்களுக்கும் மேற்படாத காலத்துக்கு நீடிக்கலாம். 12 மாதங்களுக்கும் மேற்படாத காலப் பகுதிக்கு இவ்வாறு இவ்வாறு செய்ய முடியும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. இவ்வாறாக 43 வருடங்களாக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டும் வந்திருக்கிறது. நீதிமன்றத்தின் உத்தரவின்றி ஆட்களை சிறையில் அடைக்க அனுமதிப்பதால் இந்தச் சட்டத்தை கொடூரமான சட்டம் என்று அழைப்பது மிகவும் சரியானதே.

இவ்வருடம் ஜூலையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளினால் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட உடனடியாகவே பாதுகாப்பு படைகளை பயன்படுத்தி அரசாங்கம் போராட்ட இயக்கத்தை கடுமையாக அடக்கியொடுக்கியது. அகிம்சை வழியிலான மக்கள் அதிகாரத்தின் உறுதிச்சான்றாக உலகம் பூராவும் ஊடகங்களினால் காண்பிக்கப்பட்ட -- மூன்று மாதங்களுக்கும் அதிகமான காலப்பகுதி நீடித்த போராட்டக் களங்கள் நிர்மூலஞ் செய்யப்பட்டன. போராட்டக்காரர்கள் தப்பியோடும் வரை கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்யப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது. கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தையும் ஒன்றுகூடுவதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமையையும் மீறும் வகையில் அமைந்த இந்த தடுப்பு நடவடிக்கைகள் மக்கள் போராட்டங்களை விரைவாகவே ஒரு முடிவுக்கு கொண்டு வந்தன. வன்முறையில் ஈடுபட்டதாக அல்லது வன்முறையை தூண்டுவதற்கு சதி செய்ததாக காண்பிக்கப்படாதவர்களை சிறையில் அடைப்பதற்கு பயங்கரவாத தடைச்சட்டம் அரசாங்கத்தனால் பயன்படுத்தப்பட்டது மிகவும் மோசமான செயலாகும்.

போராட்ட இயக்கம் படைபலம் கொண்டு அடக்கியொடுக்கப்பட்டதன் காரணமாக இன்று நாட்டில் வழமை நிலையின் ஒரு பொய்யான வெளித்தோற்றம் காணப்படுகிறது. அது சுற்றுலா பயணிகளையும் பொருளாதாரத்துக்கு வலுவளிக்க டொலர்களையும் கொண்டுவருவதில் உதவ முடியும். ஆனால், யதார்த்தத்தில் ஜனாதிபதியும் அரசாங்கமும் எந்த வேளையிலும் பயங்கரமானதாக மாறிவிடக்கூடிய பொருளாதார இடர் நிலைக்கும் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக குமுறிக்கொண்டிருக்கும் மக்களுக்கும் மத்தியிலேயே ஆட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். போராட்ட இயக்கத்தை சேர்ந்தவர்களுக்கு தங்களது சகாக்களில் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரியும். அமைதிவழியில் போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட அரசாங்க சார்பு குண்டர்கள் சுதந்திரமாக நடமாடித் திரிவதுடன் ஊழல் நடவடிக் கைகளில் ஈடுபடவும் செய்கிறார்கள் என்பதை காணும்போது போராட்ட இயக்கத்தை சேர்ந்தவர்கள் மனக்கவலையும் சீற்றமும் அடைகிறார்கள். இத்தகைய இரட்டைத்தனமான அணுகுமுறை அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை தொடர்ந்து அரித்துச் செல்கிறது என்பதுடன் எதிர்கால போராட்ட அணிதிரட்டல்களுக்கு ஒரு “ மின்கடத்தி “ போன்று செயற்படவும் கூடும்.

பகிரங்கமாக வீதிகளில் இறங்கி முழக்கங்களை எழுப்புவதற்கும் பலத்தைக் காட்டுவதற்காக போக்குவரத்துக்களை தடுக்கவும் வந்தவர்களை மாத்திரம் கொண்டதல்ல போராட்ட இயக்கம். இதை விடவும் பெரிய போராட்ட இயக்கம் உறங்குநிலையில் இருக்கிறது. பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட அவர்கள் குடும்பங்களை வாழ வைக்க சம்பாதிக்கவேண்டிய தேவைக்கு இப்போது முன்னுரிமை கொடுக்கவேண்டியிருக்கிறது. 70 --100 சதவீதத்துக்கு இடைப்பட்டதாக இருக்கும் பணவீக்கத்தின் விளைவாக மக்களின் உண்மையான வருமானம் குறைந்த பட்சம் அரைவாசியாக சுருங்கியிருக்கும் நிலையில் ஒரு சில அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அரசாங்கம் குறைப்பது போதுமான ஒரு நடவடிக்கையல்ல. பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் சுதந்திரமாக திரிவதுடன் அதிகாரத்திலும் இருக்கின்ற அதேவேளை போராட்டத்தை நடத்தி புதிய ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் பதவியேற்பதை உறுதிசெய்தவர்கள் தண்டிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதனால் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக கருதும் மக்களின் உணர்வுகளையும் சாந்தப்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது.

வலுவற்றவர்களுக்கு எதிராக அரசாங்கத்தினால் இழைக்கப்பட்ட அநீதியின் குறியீடுகளாக வசந்த முதலிகேயும் வண.கல்வேவ சிறிதம்ம தேரரும் விளங்குகிறார்கள். இருவரும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டவர்கள். பயங்கரவாத தடைச் சட்டம் என்பது பயங்கரவாதத்தைப் பற்றியது. பயங்கவாதத்தை தடுப்பதை நோக்கமாக கொண்டது.


அரசியல், தத்துவார்த்த மற்றும் மத ரீதியான இலட்சியங்களை முன்னெடுப்பதற்காக பீதியைப் பரப்பும் நோக்குடன் குடிமக்கள் சனத்தொகையை அல்லது அந்த குடிமக்கள் சனத்தொகையின் ஒரு பிரிவினரை இலக்குவைத்து அச்சுறுத்தலை மேற்கொள்கின்ற அல்லது பலத்தைப் பிரயோகித்து வன்முறையை மேற்கொள்கின்ற செயல்களே பயங்கரவாதம் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு வரைவிலக்கணம் கூறியிருக்கிறது. இந்த நியமத்தை பிரயோகித்துப் பார்த்தால் வசந்த முதலிகேயினதும் சிறிதம்ம தேரரின் கைதும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான தொடர்ச்சியான தடுப்புக்காவலும் காரணகாரிய அடிப்படையற்றவையும் நியாயப்படுத்த முடியாதவையும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அழூத்தம் திருத்தமாக கூறியிருக்கிறது. உடல் நலமின்றிய இருவரும் வருந்தத்தக்கு சூழ்நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நிலையில் சிறிதம்ம தேரர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

அவர்கள் இருவர் மீதும் இதுவரையில் எந்த குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை. முழுமையாக மாற்றுவதாக சர்வதேச சமூகத்துக்கு அரசாங்கம் உறுதியளித்திருக்கும் அதே பயங்கரவாத சட்டத்தின் கீழ் அவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இன நல்லிணக்கத்துக்கு வழி வகுக்கக் கூடும் என்ற நம்பிக்கையில் விடுதலை புலிகள் இயக்க கைதிகளுக்கு மன்னிப்பு அளித்து விடுதலை செய்ததைப் போன்று வசந்த முதலிகேக்கும் சிறிதம்ம தேரருக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்க மன்னிப்பை வழங்கினால் அது போராட்ட இயக்கத்தை அடக்கியொடுக்கிய அரசாங்கத்தின் கடுமையான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் ஏற்படுத்திய மனக்காயங்களை கணப்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தமுடியும்.


# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

18) 
i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , .............. , ............ ii) 18 , 15 , 12 , .............. , ............

21) | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

..........................................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

..........................................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..........................................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..............................................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

.....................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?


.....................................................

29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

..................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6 2) 8 **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130 2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745 **23.** 455
**24.** 1l 100ml / 1100ml **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30 **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2


கல்வி tv CHANNEL-1

**02.10.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள்<br>மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள்<br>மறுஒளிபரப்பு-LIVE கணிதம்<br>மறு ஒளிபரப்பு<br>அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில்<br>மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

கல்வி tv CHANNEL - 2

**02.10.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# குழல்வாய் மொழி நூல் திருமலையில் அறிமுகம்

திருமலை, நவ. 02

எழுத்தாளர் அ.ச.பாய்வா வின் குழல்வாய் மொழி இரு குறுங்காவியங்களின் நூல் அறிமுக விழா திருகோண மலை உவர்மலை சமூககற்கை கள் நிலையத்தில் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.45 மணிக்கு நீங்களும் எழுதலாம் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபால சிங்கம் தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வின் முதன்மை அதிதி யாக திருகோணமலை வலயக் கல்விப்பணிப்பாளர் சி.சிறி தரனும், சிறப்பு அதிதிகளாக ஒய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் ஓ.குலேந்திரனும் வைத்தியர் ஆய்வாளர் அ . ஸ தீஸ்குமாரும் கலந்து சிறப்பிப் பார்கள்.

நிகழ்வில் வரவேற்புரையை சிரேஷ்ட ஊடகவியலாளர் அ . அச்சுதன் வழங்க நூல் விமர்சன உரைகளை கவிஞர்களான க. யோகானந்தன், தி. லலித கோபன் ஆகியோர்வழங்கு வார்கள்.

ஏற்புரையையும் நன்றியு ரையையும் நூலாசிரியர் வழங் குவார்.

(அ)

# குச்சவெளி வடலிக்குளம் பகுதியில் புதிய நூலகம்

அம்பாறை, நவ. 02



தேசிய வாசிப்பு வாரத்தையொட்டி குச்சவெளி வடலிக் குளம் பிரதேசத்தில் புதிய நூலகத்தை குச்ச வெளி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.முபாறக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்து வைத்து பொதுமக்களி டம் கையளித்தார்.

குச்சவெளி பிரதேச சபை செயலாளர் மா.மாலினி அசோக் குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த திறப்பு விழாவில், உதவித் தவி சாளர், உறுப்பினர்கள் மற்றும் பிரதேச மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப் பித்தனர்.

அங்கு தவிசாளர் ஏ.முபா றக் உரையாற்றுகையில்,

நூலகங்களை பெயரளவில் திறந்து வைப்பதில் எவ்விதப் பிரயோசனமும் இல்லை. அதனை முழுமையாக நாம் பயன்படுத்த முயற்சிக்க வேண் டும். எம்மிடத்தில் வாசிப்புப் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். அது ஒரு மனிதனை பரிபூரணமாக்கு கிறது.

மின்னணு ஊடகத்தின் ஆதிக்கம் இன்று அதிகரித் துள்ளதால் அச்சு ஊடகத்தின் பயன்பாட்டைக் குறைவடை யச் செய்துள்ளது. அதனால் எம்மிடையே புதிய நூல்களை வாங்கும் பழக்கமும், நூலகங் களில் நூல்களை எடுத்து வாசிக் கும் பழக்கமும் குறைந்து வரு கின்றது.

வாசிப்புப் பழக்கம் குறைந்து வருவதற்கு பெற்றோர்களும் ஒரு காரணமாக உள்ளனர். ஏனென்றால், வீட்டில் புத்தகங் களை படிக்கும் பழக்கம் அவர் களிடத்தில் இல்லாததால், பிள்ளைகளும் அப்படியே மாறிவிடுகின்றனர். இதிலிருந்து நாம் மீண்டுகொள்வ தன் மூலம் வாசிப்புப் பழக்கத்தை எம்மிடத்தில் ஏற்படுத்திக் கொள்ள முடியும்-என்றார்.

# நிந்தவூர் இராணுவ முகாமை உடனடியாக இடம்மாற்றுங்கள்

## ஹஸன் அலி ஜனாதிபதியிடம் கோரிக்கை

நிந்தவூர், நவ. 02



அம்பாறை மாவட்டத் தைச் சேர்ந்த நிந்தவூரில் தற் காலிகமாக ஆரம்பிக்கப் பட்ட இராணுவ முகாமை உரிய இடத்திலிருந்து அகற் றித்தருமாறு ஐக்கிய சமாதா னக் கூட்டமைப்பின் தலைவ ரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸ ன் அலி ஜனாதிபதியைக் கோரியுள்ளார்.

வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் பாடசாலை, புனித இடங்கள் போன்ற இடங்களில் படையி னர் இருப்பதன் காரணமாக மக்களுக்கு பெரும் பிரச்சினையாக இருப்பதாக பல தரப்பினராலும் சுட்டிக்காகாட்டப்பட்டுள்ளதால் அது தொடர் பில் உடனடி நடவடிக்கை எடுத்து அந்த இடங் கள் சுதந்திரப்பகுதிகளாக அறிவிக்கப் பட வேண்டும் என்ற வேண்டுகோளை ஆராய்வதற் காக ஜனாதிபதி தலைமையில் அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ள இவ்வேளையில் நிந்தவூர் பிரதான ஜ/ம்மாபள்ளிக்கு முன்னால் செயல்பட்டு வரும் குறித்த இராணுவ பாதுகாப் புப் படை முகாமை பிறிதொரு இடத்திற்கு துரி தமாக மாற்றித்தருமாறு மின்னஞ்சல் மூலம் அவர் ஜனாதிபதியிடம் வேண்டுகோளை விடுத் துள்ளார்.

அவர் தனது வேண்டுகோளில்-

தமது கிராமத்தில் பொதுமக்கள் திரளாக கூடும் மையப்பகுதியாக அமைந்துள்ள இந்த இடத் தில் ஒரு இராணுவ கண்கா ணிப்பு வலயம் தற்காலிக ஏற் பாடாக ஆரம்பத்தில் தொடங் கப்பட்டு தற்போது படிப்படி யாக காவல் அரண்களுடன் நிரந்தர வசதிகளுடன் வளர்ந்து வருவதையிட்டு பொதுமக் கள் அதிருப்தியுடன் முறை யிட்டு வருகின்றனர். நிந்தவூர் பிரதான ஜூம்மாபள்ளி வளாகத்திற் கும் நிந்தவூர் பிரதான தெரு வுக்கும் இடையிலுள்ள பிரதேச சபைக்குச் சொந்த மான இந்த சிறிய இடப்பரப்பில் ஏற்கனவே பொது நூல்நிலையமும் அமைந்துள்ளதனால் பொது மக்கள் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

எனவே பொதுமக்களின் வசதியையும் நிம்மதியையும் கருத்தில் கொண்டு வளர்ந்து வரும் இந்த இராணுவ காவல் நிலையத்தை வேறு பொருத்தமான, பாடசாலைகள், வணக்க ஸ்தலங்கள் மற்றும் மக்கள் ஒன்றுகூடும் இடங் கள் தவிர்ந்த பகுதிகளில் அமைத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக எமது கரையோர பிரதேசங் களில் ஏற்கனவே போலிஸ் பாதுகாப்பு காலா காலமாக செயல்பட்டு சுமூகமாக இயங்கிவருவ தனால் இவ்வாறான இராணுவ கெடுபிடிகள் அகற்றப்படுவது சாலச்சிறந்தது என்பது எனது அபிப்பிராயமாகும்-என்றுள்ளது. (அ-06)

# திருக்கோவிலில் திருக்கல்யாணம்

அம்பாறை. நவ. 02



வரலாற்று பிரசித்தி பெற்ற திருக் கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விரத இறுதி யில் நடைபெறும் திருக்கல்யாணம் நிகழ்வு கடந்து இரண்டு வருடங்களுக்கு பிற்பாடு சிறப்பாக நடைபெற் றது.

திருக்கல்யாண சடங்கினை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலயகுரு சிவசிறி அங்குசநாதக்குருக்கள் ஆகியோர் சிறப் பாக நடத்தி வைத்தனர்.

ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலய குரு சிவசிறி அங்குசநாதக்குருக்கள் முன்னிலை யில் இடம் பெற்று வந்த கந்தசஷ்டி விரதம் நேற்று முன்தினம் இரவு திருக்கல்யாண நிகழ் வுடன் நிறைவு பெற்றது.

வழமைக்கு மாறாக ஏராளமான பக்தர்கள் விரதத்தினை அனுஷ்டித்து வந்ததுடன் சூரன் போர் மற்றும் திருக்கல்யாண நிகழ்வுகளிலும் பங்கேற்றனர். (அ)

# சுகாதார மேலாண்மை விதிகள் குறித்த நிகழ்வு சாய்ந்தமருதில்

அம்பாறை, நவ. 02



சாய்ந்தமருது 10 , 08 கிராம சேவகர் பிரிவுகளில் தோனா பகுதியினை அண் மித்துள்ள பொதுமக்களுக்கு “திண்மக்கழிவு மேலாண்மை, சுகாதார மேலாண்மை, கலா சார அடிப்படையிலான விதி கள் மற்றும் ஒழுங்குமுறை கள்” சம்பந்தமாக விழிப்பு ணர்வூட்டும் விசேட நிகழ்வு சாய்ந்தமருது - 10 கிராம அலுவலர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

எச்.டி.ஏ-சிறிலங்கா அமைப்பின் ஸ்தாப கத் தலைவர் எஸ்.ஏ.எம். அஸ்லம் தலைமை யில், பிரதித் தலைவர் ஜே.எம்.ஜூதாப், பொது அமைப்பாளர் ஏ.ஜே.எம். றிகாஸ், ஊடக ஒருங்கிணைப்பாளர் எச்.எம்.ஹிசாம் மற்றும் எச்.டி.ஏ-சிறிலங்காவின் ஆலோசகர் எம்.ஐ. சம்சுதீன் ஆகியோரின் ஒருங்கிணைப்பிலும் நடைபெற்றது.

இத்திட்டத்தின் நோக்க மானது கழிவுகளிலிருந்து வளத்தை மீட்டெடுப்பதும், கழிவுகளின் விளைவைக் குறைப்பதுமாகும்.

கல்முனை மாநகர சபை யின் சார்பாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் மேற் பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் யூ. எம். இஷாக் மற்றும், கல்முனை மாநகர சபையின் பொதுச் சுகாதார பரிசோதகர் எம். எம்.எம்.பைசல் ஆகியோர் பொது மக்களுக்கு கழிவு மேலாண்மை, மறுபயன்பாடு, மறு சுழற்சி மற்றும் மாற்றியமைக்கப்பட்ட கழிவு கள் மூலம் பணம் சம்பாதிப்பது எப்படி? மற்றும் சுகாதாரநலம் என்பது பற்றிய நல்ல தகவல்கள் மூலம் பொது மக்களுக்குத் தெளிவு படுத்தினர். (அ)

# அடைமழையில் உகந்தைமலையில் மூன்று மணி நேரம் சூரசம்ஹாரம்



அம்பாறை, நவ. 02

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆல யத்தில் சூரசம்ஹார நிகழ்வு கொட் டும் மழையில் ஆலய பிரதம குரு சிவசிறி சீதாராம் குருக்கள் முன்னி லையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆலய தலைவர் சுதுநிலமே திசாநாயக்க உதவி குரு சிவ சிறி கோபிநாத் குருக்கள் காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் உள்ளிட்ட சுமார் 500 பக்தர்கள் கலந்து கொண்டனர்.

சுமார் மூன்று மணி நேரம் கொட்டும் மழைக்கு மத்தியில் உக்கிரமாக போர் நடைபெற்றது.

இறுதியில் சமுத்திர கரையில் போர் நடைபெற்றது.பக்தர்கள் முற்றாக நனைந்து நனைந்து போரை கண்டுகளித்தனர். (அ)

# கருங்கடல் தானிய ஏற்றுமதி ஒப்பந்தத்திலிருந்து ரஷ்யா விலகல்

மொஸ்கோ, நவ. 02

உக்ரைனிய தானிய ஏற்றுமதிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களை பாதுகாப்பான பாதையில் செல்ல அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் தற்காலிகமாக விலகுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் அறிவித்துள்ளார்.

எனினும், இந்த ஒப்பந்தத்திலிருந்து முழுமையாக விலகவில்லை என்று அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

உக்ரைன் தனது கடற்படையைத் தாக்க கருங்கடலில் ஒரு பாதுகாப்பு வழித்தடத்தை பயன்படுத்தியதாக குற்றம் சாட்டி, ஐ.நா-வின்



தரகு ஒப்பந்தத்தில் இருந்து ரஷ்யா சனிக்கிழமை வெளியேறியது. ஆனால், இந்த தாக்குதலுக்கு உக்ரைன் பொறுப்பேற்கவில்லை.

உக்ரைனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி, இந்த ஒப்பந்தம் கௌரவிக்கப்படும் மற்றும் ரஷ்யா உலகத்தை பசியால் அச்சுறுத்துகிறது என்று குற்றம் சாட்டினார்.

வீழ்ச்சி இருந்தபோதிலும், தானியங்கள் உட்பட 354,500 தொன் உணவுகளைக் கொண்ட 12 கப்பல்கள் திங்களன்று உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்களை விட்டு வெளியேறியதாக உக்ரைனின் உட்கட்டமைப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

40,000 தொன் தானியங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களில் ஒன்று வெகுஜன பட்டினிக்கான உண்மையான சாத்தியம் கொண்ட எத்தியோப்பியாவுக்கு அனுப்பப்பட்டது. (அ)

# அமெரிக்க துருப்புகளுடன் சேர்ந்து போரிட்ட ஆப்கான் வீரர்களை ஆட்சேர்ப்பு செய்யும் ரஷ்யா?

மொஸ்கோ, நவ. 02

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கத் துருப்புக்களுடன் சேர்ந்து போரிட்டு ஈரானுக்குத் தப்பிச் சென்ற ஆப்கானிஸ்தான் சிறப்புப் படை வீரர்கள் இப்போது உக்ரைனில் போரிட ரஷ்ய இராணுவத்தால் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளதாக அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யர்கள் ஆயிரக்கணக்கான முன்னாள் உயரடுக்கு ஆப்கானிய கமாண்டோக்களை 'வெளிநாட்டுப் படையணியாக' ஈர்க்க விரும்புவதாகவும், அவர்களுக்கு மாதம் 1,500 டொலர்கள் சம்பளம் மற்றும் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களுக்கும் பாதுகாப்பான புகலிடத்தை உறுதியளித்ததாகவும் மூன்று முன்னாள் ஆப்கானிஸ்தான் ஜெனரல்கள் தெரிவித்துள்ளனர்.

ஈரானில் உள்ள சில பத்து கொமாண்டோக்கள் நாடுகடத்தப் படுவதாகவும், அவர்களுக்கு சண்டையிட விருப்பமில்லை என்ற போதிலும் அவர்களுக்கு வேறு வழியில்லை என்று ஜெனரல்களில் ஒருவரான அப்துல் ராஃப் அர்கண்டிவால் கூறினார்.

ஆட்சேர்ப்பு ரஷ்ய கூலிப்படையான வாக்னர் குழுவால் நடத்தப்படுகிறது என்று அர்கண்டிவால் மேலும் கூறினார்.

தலிபான்கள் பொறுப்பேற்பதற்கு முன் கடைசி ஆப்கானிய இராணுவத் தளபதி, ரஷ்யாவில் வசித்து வந்த மற்றும் மொழியைப் பேசும் முன்னாள் ஆப்கானிய சிறப்புப் படைத் தளபதியும் இந்த முயற்சிக்கு உதவுகிறார் என மற்றொரு ஜெனரல், ஹிபத்துல்லா அலிசாய் கூறினார். (அ)

# ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல்களால் உக்ரைனில் தண்ணீர்த் தட்டுப்பாடு!

கீவ், நவ. 02

ரஷ்யாவின் தொடர் ஏவுகணைத் தாக்குதல் களால், உக்ரைன் தலைநகர் கீவ்வில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், மக்கள் தண்ணீருக்காக வரிசையில் காத்திருக்க வேண்டியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் திங்கட்கிழமை நாடு முழுவதும் உள்ள முக்கிய உட்கட்டமைப்பு வசதிகள் மீது நடத்தப்பட்ட இந்த தாக்குதல்க ளால், தலைநகர் கீவ்வில் சதவீத நுகர்வோர் தண்ணீர் இல்லாமல் இருப்பதாகவும், 270,000 வீடுகளுக்கு மின்சாரம் இல்லை என்றும் நகரின் மேயர் விட்டலி



கிளிட்ச்கோ கூறினார்.

மேலும், நாடு தழுவிய தாக்குதல்களில் 13 பேர் காயமடைந்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.(அ)



# நோர்வே படைகளின் ஆயத்தநிலை அதிகரிப்பு!

## லண்டனுக்கான எரிவாயு குழாய்கள்மீது ரஷ்யா குறி வைக்கும் என அச்சம்

ஒஸ்லோ, நவ. 02

உக்ரைன் போரினால் எழுந்துள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் நோர்வே அதன் பாதுகாப்புப் படைகளின் ஆயத்த நிலையை மேலும் அதிகரித்திருக்கிறது.

நேட்டோ அணியுடன் இணைந்து கடலிலும் தரையிலும் உள்ள எண்ணெய் மற்றும் எரிவாயு நிலைகளைப் பாதுகாப்பதற்கான

ரோந்துப் பணிகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு படைகளின் ஆயத்த நிலை நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் அதிகரிக்கப்படுவதாக பிரதமர் ஜோனாஸ் ஹார் ஸ்டோர் தெரிவித்திருக்கிறார்

ரஷ்யா அதன் போரை அண்டை நாடுகளுக்கு விஸ்தரிக்கும் அறிகுறிகள் தென்படாவிடினும் அதிகரித்து வரும் பதற்றம் அச்சுறுத்தல், உளவு, தலையீடுகள் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவையை உருவாக்கியுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ரஷ்யா அதன் இயற்கை எரிவாயுவை நிறுத்தியதை அடுத்து நோர்வே

ஐரோப்பாவின் பிரதான எரிவாயு விநியோக நாடாக மாறியுள்ளது. அதனால் அதன் எரிவாயு மையங்கள் ரஷ்யாவின் நாச வேலைகளுக்கு இலக்காகலாம் என்ற அச்சங்கள் அதிகரித்துள்ளன. அதை நிரூபிப்பது போன்ற பல சம்பவங்கள் அண்மைக் காலத்தில் அங்கு அவதானிக் கப்பட்டுள்ளன. நோர்வேயின் எண்ணெய், எரிவாயு நிலை களுக்கு மேல் ட்ரோன்களைப் பறக்க விட்ட ரஷ்யப் பிர ஜைகள் அடுத்தடுத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். அதை விட ரஷ்ய உளவாளியான பல்கலைக் கழக ஆய்வாளர் ஒருவரை நோர்வே ரகசிய சேவையினர் சில தினங்களுக்கு முன்னர் கைது செய்திருக்கின்றனர். பிறேசில் நாட்டவர் என்ற அடையாள ஆவணங்களுடன் ஒஸ்லோவில் தங்கியிருந்த பிரஸ்தாப பல்கலைக்கழக விரிவுரையாளர் ரஷ்யாவுக்காக உளவுத் தகவல்களைச் சேகரித்து வந்துள்ளார் என்று குற்றம்சாட்டப் பட்டிருக்கிறார்.

பால்டிக் கடலில் அண்மையில் நோட் ஸ்ட்ரீம் எரிவாயுக் குழாய்கள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவம்

ஆழ் கடல் ஊடான நோர்வேயின் எரிவாயுக் குழாய்களின் பாதுகாப்புத் தொடர்பான அச்சங்கள் ஏற்படுத்தி உள்ளது. நோட் ஸ்ட்ரீம் குழாய்கள் தாக்கப்பட்ட சம்பவத்துடன் பிரிட்டிஷ் ரோயல் கடற்படைக்குத் தொடர்பு இருப்பதாக மொஸ்கோ குற்றம் சுமத்தியுள்ளது. அது லண்டனுக்கும் கிரெம்ளினுக்கும் இடையே பதற்றத்தை அதிகரித்திருக்கிறது.

பிரிட்டிஷ் மக்களைக் கடும் குளிரில் சிக்க வைக்கின்ற நோக்குடன் நோர்வேயில் இருந்து எரிவாயுவை விநியோகிக்கின்ற குழாய்களை ரஷ்யா நாச வேலை மூலம் துண்டிக்கக் கூடும் என்று நேட்டோ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இங்கிலாந்தின் எரிவாயுத் தேவையில் ஐந்தில் ஒரு பங்கை நோர்வே அதன் வட கடலடிக் குழாய் மூலம் வழங்கி வருகிறது. (அ)

# ரஷ்ய சைபர் தாக்குதல்களில் இருந்து உக்ரைனை பாதுகாத்துள்ள பிரிட்டன்

## வெளியுறவுத்துறை அமைச்சர் தகவல்



லண்டன், நவ. 02

ரஷ்ய படையெடுப்பின் தொடக்கத்தில் இருந்து பரவலான ரஷ்ய சைபர் தாக்குதல்களில் இருந்து உக்ரைனை பாதுகாப்பதில் பிரித்தானிய உளவாளிகள் முக்கிய பங்கு வகித்து வருகின்றனர் என தெரியவந்துள்ளது.

பிரித்தானிய உதவி இல்லாமல் ரஷ்ய ஹேக்கர்களால் ஏற்படும் சேதம் 'மிக முக்கியமானதாக' இருந்திருக்கும் என்று இளநிலை வெளியுறவுத்துறை அமைச்சர் லியோ டோச்செர்டி தெரிவித்துள்ளார்.

'நாங்கள் ஏற்கனவே முன்னணியில் இருக்கிறோம். அச்சுறுத்தலைப் பற்றி நாங்கள் அறிந்திருக்கிறோம். நாங்கள் எங்கள் சொந்த தயாரிப்புகளையும் எங்கள் சொந்த பாதுகாப்பையும் உயர்த்தியுள்ளோம்.

அதனால்தான் இணைய பாதுகாப்புக்கு வரும்போது நாங்கள் சில ஆழ்ந்த நிபுணத்துவத்தைப் பெற்றுள்ளோம், அதை எங்கள் உக்ரைனிய நட்பு நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.' என கூறினார்.

ரஷ்யாவிடமிருந்து மிக முக்கியமான இணைய அச்சுறுத்தல் காரணமாக பிரித்தானியா தனது சொந்த இணையப் பாதுகாப்பை வலுப்படுத்தியுள்ளது.

பிரித்தானியா தனது இணைய ஆதரவை பகிரங்கப்படுத்தியுள்ளது, ஏனெனில் அதை ரகசியமாக வைத்திருப்பது இனி அவசியமில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இது கிரெம்ளின் ஏற்கனவே அறிந்திருந்தது என்பதற்கான அறிகுறியாகும்.

6.35 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள, உக்ரைன் சைபர் திட்டம் என்று அழைக்கப்படும் இந்த திட்டம் பெப்ரவரி 24ஆம் திகதி ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது முழு அளவிலான போரைத் தொடங்கிய பிறகு செயற்படுத்தப்பட்டது. (அ)



## 57 பந்துகளில் 162 ஓட்டங்கள் தென்னாபிரிக்க வீரர் அதிரடி!

கேப்டவுன், நவ. 02

இளம் தென்னாபிரிக்க வீரர் டெவால்ட் ப்ரீவிஸ் இருபது - 20 போட்டிகளில் 3ஆவது அதிகபட்ச ஓட்டங்களை எடுத்துச் சாதனைப் படைத்துள்ளார்.

தென்னாபிரிக்கா இருபது -20 தொடரில் டைட்டன்ஸ் அணியை சேர்ந்த டெவால்ட் ப்ரீவிஸ் டி20யில் இந்த சாதனையை புரிந்துள்ளார். இவர், 57 பந்துகளில் 162 ஓட்டங்களை விளாசினார். இதில் 13 பௌண்டரிகளும், 13 சிக்ஸர்களும் அடங்கும்.

இதற்கு முன்பாக மே.இ. தீவுகள் அணியை செர்ந்த கிறிஸ் கெயில் ஐ. பி. எல். தொடரில் 66 பந்துகளுக்கு 175 ஓட்டங்கள் எடுத்தது முதலிடத்தில் உள்ளது. இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலியாவின் அரோன் பின்ஞ் 172 ஓட்டங்களுடன் இருக்கிறார். இவரைத் தொடர்ந்து சிம்பாப்வே துடுப்பாட்ட வீரர் ஹமில்டன் 71 பந்துகளில் 162 ஓட்டங்களுடன் 4ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.

உள்ளூர் இருபது -20 போட்டிகளில் குறைவான பந்துகளில் 150 ஓட்டங்களை அடித்தவர் பட்டியலில் டெவால் பிரிவீஸ் முதலிடத்தில் இருக்கிறார். 52 பந்துகளில் 150 ஓட்டங்களை எடுத்தமை குறிப்பிடத்தக்கது.

இவரின் அதிரடி ஆட்டம் பிரபல தென்னாபிரிக்க வீரர் ஏபி டி வில்லியர்ஸ் போலவே இருப்பதால் இவரை "பேபி ஏபி" என ரசிகர்கள் அழைப்பதுண்டு. இந்தப் போட்டி குறித்து டி வில்லியர்ஸ் தனது டுவிற்றர் பக்கத்தில் "டெவால்ட் ப்ரீவிஸ். வேறெதும் சொல்லத் தேவையில்லை" என பதிவிட்டுள்ளார்.

(ஐ)

இருபது - 20 உலகக் கிண்ணம்:

# ஆப்கானிஸ்தானை வென்றது இலங்கை

பிரிஸ்பேர்ன், நவ. 02

ஆப்கானிஸ்தான் அணியை இலங்கை 6 விக்கெட்களால் வெற்றி கொண்டது. இந்த வெற்றியின் மூலம் தடுமாற்றத்திலிருந்த இலங்கையின் அரையிறுதிக் கனவு சற்றுப் பிரகாசமாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் நடந்து வரும் இருபது - 20 தொடரில் நேற்று பிரிஸ்பேர்னில் நடந்த போட்டியில் ஆப்கானிஸ்தான் - இலங்கை அணிகள் மோதின.

ஆப்கானிஸ்தான் நிர்ணயித்த 145 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை 18.3 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றது.

இலங்கைக்கு தொடக்கம் கொடுத்த பதும் நிஸங்க 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். குசல் மெண்டிஸும் தனஞ்சய டி சில்வாவும் 2ஆவது விக்கெட்டுக்காக 34 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த போது குசல் மெண்டிஸ் 25 ஓட்டங்களுடன் வெளியேறினார். (46 - 2 விக்.)

எனினும் தனஞ்சய டி சில்வாவும் சரித் அசலங்கவும் 3 ஆவது விக்கெட்டுக்காக 56 ஓட்டங்களை சேர்த்து அணிக்கு நம்பிக்கையூட்டினர். அணியின் மொத்த ஓட்டம் 100 ஆக இருந்தபோது சரித் அசலங்க 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ஒரு பக்கத்தில் திறமையாகத் துடுப்பெடுத்தாடிய தனஞ்சய டி சில்வாவுடன் இணைந்தார் பானுக ராஜபக்ஷ. இவர்கள் இருவரும் 4ஆவது விக்கெட்டுக்காக 42 ஓட்டங்களை எடுத்தனர்.



தனஞ்சய டி சில்வா 42 பந்துகளை எதிர்கொண்டு 6 பௌண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். வெற்றிக்கு 3 ஓட்டங்கள் தேவைப்பட்டபோது பானுக ராஜபக்ஷ 18 ஓட்டங்களுடன் களம் விட்டகன்றார்.

ஆப்கானிஸ்தானின் பந்து வீச்சில் முஜிப் உர் ரஹ்மான் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் ராஷித் கான் 31 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது.

ரஹ்மானுல்லா குர்பாஸ் (28), உஸ்மான் கானி (27) ஆகிய இருவரும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி பவர் ப்ளே ஓவர்களில் 42 ஓட்டங்களைப் பகிர்ந்து சிறந்த ஆரம்பத்தை ஏற்படுத்தினர்.

ஆனால், 7ஆவது ஓவரில் குர்பாஸின் விக்கெட்டை லஹிரு குமார கைப்பற்றிய பின்னர் ஆப்கானிஸ்தான் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. முதல் ஆறு துடுப்பாட்ட வீரர்கள் இரு வரிசை இலக்க எண்ணிக்கைகளைப் பெற்றபோதிலும் அவர்கள் கணிசமான ஓட்டங்களைப் பெறத் தவறியமை ஆப்கானிஸ்தானுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்தது.

ஆரம்ப வீரர்களைவிட இப்ராஹிம் ஸத்ரான் (22), நஜிபுல்லா ஸத்ரான் (18), மோஹமத் நபி (13) ஆகியோரே 10 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர்.

இலங்கை பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க 13 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் லஹிரு குமார 30 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களையும் தனஞ்சய டி சில்வா 9 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்டையும் கசுன் ராஜித்த 31 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக வனிந்து ஹசரங்க தெரிவானார்.

(ஐ)

## காயத்தால் அவதியுறும் அவுஸ்திரேலியாவின் பின்ஞ்



பிரிஸ்பேர்ன், நவ. 01

அவுஸ்திரேலிய அணித் தலைவர் அரோன் பின்ஞ் தசைப்பிடிப்பு காயத்தால் அவதிப்படுகிறார்.

நேற்று முன்தினம் அயர்லாந்து அணிக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியா 42 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதில் 63 ஓட்டங்கள் விளாசி ஆட்டநாயகன் விருது பெற்ற அவுஸ்திரேலிய அணித் தலைவர் அரோன் பின்ஞ் தசைப் பிடிப்பு காயத்தால் அவதிப் படுகிறார்.

அயர்லாந்து துடுப்பாட்டத்தின்போது பாதியிலேயே பெவிலியன் திரும்பினார். எஞ்சிய நேரம் அவருக்கு பதிலாக மத்தியூ வேட், மக்ஸ்வெல் அணியை வழிநடத்தினர்.

பின்ஞ் கூறுகையில், "கொஞ்சம் தசைப்பிடிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அது மோசமானதாக இருக்கும் என்று நினைக்கவில்லை. ஸ்கான் செய்த பிறகே காயத் தன்மை குறித்து முழுமையாக தெரிய வரும். வெள்ளிக் கிழமை நடக்கும் ஆப்கானிஸ் தானுக்கு எதிரான ஆட்டத்துக்குள் உடல்தகுதியை எட்டி விடுவேன் என்று நம்புகிறேன்" என்றார்.

(ஐ)

# நியூசிலாந்துடனான தொடர் இந்திய அணி அறிவிப்பு!

புதுடில்லி, நவ. 02

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடர் நிறைவடைந்ததும் இந்திய அணி நியூசிலாந்துக்கும், பின்னர் பங்களாதேஷுக்கும் செல்கிறது.

நியூசிலாந்து - இந்திய அணிகள் ஒருநாள் மற்றும் இருபது - 20 தொடர்களில் விளையாடுகின்றன. இரு அணிகளுக்கும் இடையிலான 3 போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடர் நவம்பர் 18 முதல் நவம்பர் 22 வரை நடைபெறுகிறது. இதைத் தொடர்ந்து ஒருநாள் தொடர் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நவம்பர் 25-ல் தொடங்குகிறது.

நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் கோலி, ரோஹித் சர்மா ஆகியோருக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இந்திய அணியை ஹார்திக் பாண்ட்யா வழி நடத்துகிறார். ரிஷப் பந்த் உப அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.



அணி விவரம்:

ஹார்திக் பாண்ட்யா (அணித் தலைவர்) ரிஷப் பந்த், ஷுப்மன் கில், இஷான் கிஷன், தீபக் ஹூடா, சூர்ய குமார் யாதவ், ஷ்ரேயாஸ் ஐயர், சஞ்சு சாம்சன், வாஷிங்டன் சுந்தர், யுஸ்வேந்திர சாஹல், குல்தீப் யாதவ், அர்ஷ்தீப் சிங், ஹர்ஷல் படேல் , முகமது. சிராஜ், புவனேஷ்வர் குமார், உம்ரான் மாலிக்.

(ஐ)



## காக்கைதீவில் வெள்ளப் பாதிப்பு மூன்று குடும்பங்கள் இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், நவ. 02

யாழில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடைமழை காரணமாக மூன்று குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பருவப் பெயர்ச்சி மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் யாழ். மாவட்டம் முழுவதும் தொடர்ச்சியாக மழை பெய்துவருகின்றது.

இந்த அடைமழை காரணமாக வீட்டினுள் வெள்ளம் புகுந்ததனால் யாழ்ப்பாணம் - காக்கைதீவு பகுதியில் வசித்துவரும் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் காக்கைதீவு மீனவர் சங்க கட்டடத்தினுள் தங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது. (அ)

## மலேசியா இலங்கைக்கு மருந்துகள் நன்கொடை

கொழும்பு, நவ. 02

மலேசியா அரசாங்கம் இலங்கைக்கு 288,610 மலேசியன் ரிங்கிட் (22,350,000 ரூபா) மதிப்புள்ள மருந்து மற்றும் மருத்துவப் பொருட்களை நன்கொடையாக வழங்கியுள்ளது.

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் எயார் சீப் மார்ஷல் சுமங்கல டயஸிடம், புத்ராஜெயாவில் உள்ள சுகாதார அமைச்சில், சுகாதார அமைச்சர் கைரி ஜமாலுதீனினால் மருந்துவப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

மலேசிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இந்த நன்கொடையானது மலேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய உறவுகளையும் நட்பையும் அதன் தற்போதைய சமூக-பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மீட்புக் காலத்தில் மலேசிய மக்கள் இலங்கை மக்களுடன் இருப்பதாகவும், அதன் மக்களுக்கு அத்தியாவசிய மருத்துவ சிகிச்சை மற்றும் சுகாதார சேவைகளை வழங்குவதில் இலங்கை அரசாங்கத்திற்கு பங்களிப்பு உதவும் என நம்புவதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

## கோட்டாவின் தோல்விக்கு நாமலே முழுக் காரணம் !

### சன்ன ஜயசுமண குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 02

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தோல்விக்குக் கட்சியின் சக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே காரணமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு செவிசாய்த்து அதன்படி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்படுவார் என கட்சி எதிர்பார்த்தது.

முதல் சில மாதங்கள் கோட்டாபய ராஜபக்ஷ அவ்வாறு செயற்பட்ட போதிலும் அதன்பின்னர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகளை அவர் புறக்கணித்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் சில குடும்ப உறுப்பினர்களின்



ஆலோசனைகளை மாத்திரமே கோட்டாபய ராஜபக்ஷ செவிமடுத்ததாகவும் அதனால்தான் அவர் ஜனாதிபதியாக தோல்வியடைந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு செவிசாய்த்திருந்தால் கோட்டாபய தோல் வியடைந்திருக்கமாட்டார். நாமல் தனது செயற்பாடுகளுக்காக கட்சி உறுப்பினர்கள் மீது பழியை சுமத்த முற்பட்டுள்ளதாகவும் சன்ன ஜயசுமன கடுமையாக சாடியுள்ளார். (அ)

# அரசை எவராலும் கவிழ்க்க முடியாது

## பிரசன்ன ரணதுங்க திட்டவட்டம்

கொழும்பு, நவ. 02

**போராட்டக்காரர்கள் அரசியல்வாதிகளின் வீடுகளை எரித்து மக்களை கொல்ல முயற்சித்தால் அவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வன்முறை மற்றும் கொலைகள் மூலம் அரசாங்கத்தை கவிழ்க்க இடமளிக்கக்கூடாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

எவ்வாறாயினும், எந்த நேரத்திலும் அமைதியான போராட்டக்காரர்களின் குரல்களுக்கு செவிசாய்க்க நாங்கள் எப்போதும் தயாராகவே உள்ளோம் எனவும் அவர் கூறினார்.

கோட்டை ராம்பார்ட் ஈரநில பூங்காவை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

நவம்பர் 2 ஆம் திகதி கொழும்பில் பாரிய போராட்டத்தை நடத்துவதற்கான பல திட்டங்கள் குறித்து கருத்து தெரிவித்த அமைச்சர், அமைதியான மற்றும் நியாயமான போராட்டக்காரர்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் தயாராக இருந்தாலும், வன்முறை மற்றும் குற்றச்செயல்களில் ஈடுபட எவரையும் அனுமதிக்காது.

அடக்குமுறையால் அடக்குமுறையை நிறுத்தவேண்டும் என சொல்கிறேன். அதற்கு நாங்களும் தயாராக இருக்கிறோம். நாட்டின் எதிர்காலத்திற்காக ஒவ்வொருவரும் தங்களை அர்ப்பணிக்க வேண்டிய தருணம் இது. மக்கள் கொல்லப்படுவதையோ அல்லது வீடுகளை எரிப்பதையோ யாராவது நியாயப்படுத்த முடியுமா? மக்களைக் கொல்வதன் மூலமும், வீடுகளுக்குத் தீ வைப்பதன் மூலமும் அரசாங்கத்தை கவிழ்ப்பதை நாங்கள் அனுமதிக்க முடியாது- என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு புத்துயிர் அளிக்கும் முயற்சிகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விமர்சனம் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தனது மகனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு கொண்டு வருவதே முன்னாள் ஜனாதிபதியின் இலட்சியமாகும். அவர் காலத்தில்தான் நாடு அதிக கடன்களைப் பெற்றது. தற்போது இந்த உண்மையை மறைக்கும் வகையில் பல விடயங்களை அவர் கூறி வருகிறார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிகவும் பலமான அரசியல் கட்சி எனவும்,. நாளை தேர்தல் வந்தாலும் வலுவாக நிற்கலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

"நியாயமான விமர்சனங்களை ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால், சமீபகாலமாக நாடு பாரிய ஆபத்தை எதிர்கொண்டபோது சவால்களை எதிர்கொள்ள எவரும் முன்வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் சவால்களை எதிர்கொள்ளப் பயந்தார். தற்போது சவால்களை ஏற்கும் தலைவருடன் பயணம் மேற்கொண்டு வருகிறோம். அந்த சவாலை ஏற்றுக்கொண்ட தலைவருக்காக எங்கள் கட்சி சில தியாகங்களைச் செய்துள்ளது. நாங்கள் யானையை பலப்படுத்தவில்லை. ஜனாதிபதி கூட கட்சியை பலப்படுத்த முயற்சிக்கவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

## ஆளுங்கட்சி எம்.பிக்கள் வெளிநாடு பறக்க தடை!

கொழும்பு, நவ. 02

பாராளுமன்றம் கூடுகின்ற தினங்களிலும், வரவு செலவுத் திட்ட விவாதம் இடம்பெறுகின்ற காலப்பகுதியிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்லக் கூடாது என்று பணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை பிரதமர் தினேஷ் குணவர்தன முன்வைத்துள்ளார்.

இதற்கமைய அவசர மருத்துவ தேவைகளுக்கு அல்லது அரசின் அவசர பணிகளுக்கான சந்தர்ப்பங்கள் தவிர்ந்த, வேறு தேவைகளுக்காக அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் அரசாங்க கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (அ)



## யாழில் தொடர்ந்து கொட்டும் மழை வெள்ளக்காடாக விவசாய நிலங்கள்

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் திங்கள் பல மணி நேரமாக இடைவிடாது தொடர்ச்சியாக கடும் மழை பெய்தது.

கடந்த ஞாயிறு காலை 9 மணி முதல் நேற்று முன் தினம் அதிகாலை வரை யாழில் அடை மழை நீடித்தது. இதன் பின் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணி முதல் தொடர் மழை பெய்த நிலையில் மழை ஆரம்பித்து சுமார் 2 மணித்தியாலங்களிலேயே வலிகாமத்தின் பெரும்பாலான விவசாய நிலங்கள் வெள்ளக்காடாக மாறின.

அத்துடன் யாழ். மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகளிலும் வீதிகளிலும் அதிக வெள்ள நீர் தேங்கி நிற்பதைக் காண முடிந்தது. (அ)

## குருந்தூர்...

விக்ரமநாயக்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளன.

அந்தக் கடிதத்தில்,

1933ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி ஊடாக சிலைகள் மற்றும் தொல்பொருள் சின்னங்களை கொண்ட குருந்தூர் மலை பகுதியின் 78 ஏக்கர் நிலப்பரப்பு பாதுகாக்கப்பட்ட தொல்பொருள் காணி என அறிவிக்கப்பட்டது.

அத்துடன் 1924ஆம் ஆண்டு நிலப்பரப்பின் விசேட தொல்பொருள் சின்னங்கள் அடையாளப்படுத்தப்பட்டன. இந்த வரைபடத்திற்குள் கோயில் மற்றும் தேவாலயத்தின் சிலை சின்னங்கள் விகாரைக்கு ஒதுக்குப்புறத்தில் குருந்தூர் குள பகுதியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

'குருந்தக' என்ற பெயரில் இந்த பௌத்த விகாரை கி.பி 100 - 103 காலப்பகுதியில் பல்லாடநாக என்ற அரசனால் நிர்மாணிக்கப்பட்டது. மகாவம்சத்தின் சான்றுப்படி கி.பி 1055-1110 காலத்தில் முதலாவது விஜயபாகு அரசனால் இந்த விகாரை புனரமைக்கப்பட்டது.

ஹென்றி பாகரின் 1886 ஆண்டின் வருடாந்த அறிக்கையில் இந்த தொல்பொருள் பூமி தொடர்பில் 'காலம் காலமாக நேர்ந்த அழிவுகளை காட்டிலும், இந்த பகுதிக்கு குடியமர்வதற்காக வருகை தந்த தமிழர்களினால் இந்த தொல்பொருள் சின்னங்கள் அழிக்கப்பட்டன' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய குருந்தூர் விகாரை மற்றும் அதனை சூழ்ந்துள்ள பகுதி முக்கியமான தேசிய மரபுரிமையாகும் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தொல்பொருள் திணைக்களத்தின் சட்டபூர்வமான திட்டத்திற்கமைய விகாரையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து பல்வேறு வழிமுறைகளில் தடைகளை ஏற்படுத்தி வருகிறார்கள். இதனை தொடர்ந்து இப்பகுதியின் அமைதிக்கு பாதிப்பு ஏற்படுவதை தடுப்பதற்கு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை கருத்தில் கொண்டு தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் தனது பொறுப்பில் இருந்து விலகியுள்ளார். தொல்பொருள் கட்டளைச் சட்டத்தை மீறி அமைதிக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்பட்ட அரசியல் தரப்பினருக்கு எதிராக எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது அரச கட்டமைப்பின் பலவீனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

பிரச்னைகளை தோற்றுவிப்பவர்கள் பொது சட்டத்தை தமது கைகளில் எடுப்பது தவறான எடுத்துக்காட்டாக அமையும். இனவாதம் மற்றும் மதவாதம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி இவர்கள் அடாவடித்தனமாக செயல்படுகிறார்கள்.

தேசிய தமிழ் அரசியல் புலம்பெயர் சார்பாளர்களும், புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கும், போராட்டகாரர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொண்ட தரப்பினருக்கும் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி சாதகமாக உள்ளது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகள் பௌத்த மரபுரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகிறது.

குருந்தூர் மலை பகுதியில் சட்டரீதியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை முன்னெடுத்து செல்லாவிடின் நீதிமன்றத்தை நாடுவதற்கு தீர்மானித்துள்ளோம். தேசிய மரபுரிமைகளை பாதிப்புக்கு உள்ளாக்குபவர்கள் தேசிய மரபுரிமைகளை காட்டிக் கொடுத்தவர்களாக வரலாற்றில் அடையாளப் படுத்தப்படுவார்கள் - என்றுள்ளது. (ஐ)

## போராட்டத்துக்கு...

காலவரையறையற்ற தாமதம் குறித்து எதிர்க்கட்சிகள் அச் சத்தை வெளிப்படுத்தியுள்ளன. இந்நிலையில், அவை திட்டமிட்ட போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

இதனிடையே இன்று நடக்கும் போராட்டத்துக்கு தலைமை தாங்குவது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி, ஜே. வி. பி. இடையே கடும் போட்டி நிலவுகிறது.

ஜே. வி. பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் லால்காந்த, "அரசாங்கத்தில் மட்டுமின்றி எதிர்க்கட்சிகளிலும் ஊழல்வாதிகள் உள்ளனர். வஞ்சகர்கள் அரசாங்கத்தின் பக்கம் மட்டுமே இருக்கின்றனர் என்று நினைக்கிறார்கள். இல்லை அவர்களும் எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள். இதற்கு முன்னர் அரசாங்கத்தில் இருந்தவர்கள் முன்னர் அமைச்சு பதவிகளை வகித்தவர்கள் அல்லது அமைச்சரவையில் இருந்தவர்கள் அனைவரும் எதிர்க்கட்சியிலும் உள்ளனர் என்று கூறினார்.

இந்நிலையில், இதற்கு பதிலடியாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொது செயலரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துமபண்டார, எங்களுடைய பலம் மற்றும் வெற்றிக்கான எங்கள் திறனை கண்டு ஜே. வி. பி. எங்களைத் தாக்கத் தொடங்கியுள்ளது. நாங்கள் பலமாக இருப்பதால் அவர்கள் எங்களை தாக்குகிறார்கள்", என்று கூறியுள்ளார்.

இந்த இரு சாரரின் போட்டியும் பகிரங்கமாகியுள்ள நிலையில் இன்றைய போராட்டத்திலும் இது எதிரொலிக்கக் கூடும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

## அமைதிவழி...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அடக்குமுறைக்கு எதிரான தொழில் சங்கங்களின் கூட்டுப் பிரகடனத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று செவ்வாய்க்கிழமை கையெழுத்திட்டார். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"கொழும்பில் நாளை (இன்று) முன்னெடுக்கப்படவுள்ள பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது என்று சிலர் கூறுகின்றனர். இது பொய்யானது. இந்த பேரணிக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையாக ஆதரவளிக்கும் - நூறுவீதம் தனது ஒத்துழைப்பை வழங்கும் - என்றார். (ஐ- கே)

## ஓ. எம். பிக்கு...

இந்நிலையில், நேற்று அந்த அலுவலகத்தின் முன்பாகக் கூடிய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு எதிராகப் பல கோஷங்களை எழுப்பினர். அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தையும் நிராகரித்தனர்.

இந்த வேளை, பதிவுக்காக அலுவலகத்துக்கு வந்திருந்த சிலரையும் பதிவு செய்ய வேண்டாம் என்று கோரினர். இந்நிலையில், போராட்டம் நடத்திய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை பொலிஸார் வலிந்து அங்கிருந்து அகற்ற முனைந்தனர். இதை யடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

எனினும், பின்னர் பதிவுகளை செய்வதற்காக வந்தவர்கள் அதனை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. (ஐ)

## உள்ளூராட்சி...

ரங்களை அதிகரிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

வாதுவை புதிய சந்தைத் தொகுதியை பொதுமக்களிடம் கையளிக்கும் நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கம் எப்போதும் வர்த்தக சமூகத்தினருக்கு சக்தியை அளிக்கும் விதத்தில் செயல்படுவதற்கான தீர்மானங்களை எடுப்பதுடன், பொதுமக்களின் பிரச்னைகளைத் தீர்க்கும் முதலாவது நிறுவனமாக, உள்ளூராட்சி நிறுவனங்கள் செயல்படுகிறது. பொதுமக்களுக்கு சிறந்த வினைத்திறனான சேவைகளை வழங்கும் பொருட்டு களுத்துறை பிதேச சபையை, நகர சபையாக மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அரசாங்கம் என்ற ரீதியில் நிதிப்பிரச்னைகள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கியிருந்தாலும், கோவிட் தொற்று உலகளாவிய ரீதியில் பரவியமையானது, இந்நெருக்கடி மேலும் தீவிரமடைவதற்குக் காரணமாகியது.

அதனால் பொதுமக்களின் சுகாதாரத்திற்காக அதிகளவான பணத்தை அரசாங்கம் செலவு செய்யவேண்டியேற்பட்டது. தற்போதைய நிலைமைகளை சமாளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## தெல்லிப்பழை...

ஒத்துழைப்பு இயக்கம், குரலற்றவர்களின் குரல் அமைப்பு என்பன ஒன்றாக அழைப்பு விடுத்துள்ளன.

இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

வலி. வடக்கு மக்களின் காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டத்துக்கான அழைப்பை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் நேற்று விடுத்தனர். இங்கு நடைபெறுகின்ற காணி அபகரிப்பு எங்கள் தாயகத்தை கூறு போடுகின்ற நிகழ்வுக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்தில் வலி. வடக்கிலே காணிகளை அபகரித்து பொதுமக்களுடைய காணிகளை அபகரித்து அரச இயந்திரங்கள் தங்களுடைய செயல்பாடுகளுக்கு பயன்படுத்துகிற அந்த செயல்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு நாமும் ஆதரவு தெரிவிக்கின்றோம்.

யாழ். மாவட்டத்தில் 3,427 ஏக்கர் நிலம் அரசினுடைய இராணுவம், ஏனைய படைத் தரப்புகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. வலி. வடக்கில் 2,467 ஏக்கர் நிலம் படைகளின் பிடியில் உள்ளது. இவை அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும்.

காணி அமைச்சின் மேலதிக செயலாளர் தெல்லிப்பழை பிரதேச செயலாளருக்கு அனுப்பிய கடிதத்திலே 1,674 ஏக்கர் நிலத்தை சுவிகரிப்பதற்கு உத்தரவு இட்டு இருக்கின்றார். இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். எங்கள் வளங்கள் சுரண்டப்படுகின்றன. சிங்கள - பௌத்த பேரினவாத அரசாங்கம் எங்களுடைய நிலத்தை பயன்படுத்தி தோட்டம் செய்வதாக இருக்கட்டும் எங்களுடைய கடல் வளத்தை சுரண்டி அவர்களின் பொருளாதாரத்தை வளர்க்கின்றனர். இது எமது நிலம் இதுவே எமது உரிமை என்று நாளைய தினம் போராட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

எனவே இன்றைய போராட்டத்துக்கு பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைப்பை தர வேண்டும் என்று பிரதிநிதிகள் சார்பில் கருத்து வெளியிட்ட வேலன் சுவாமிகள் கூறினார்.

## அரசுக்கு...

இந்தப் போராட்டத்துக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதன் பங்காளிக் கட்சிகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறீ லங்கா சுதந்திரக் கட்சி, ஜே. வி. பி, முன்னிலை சோசலிஷக் கட்சி, சுதந்திர மக்கள் சபை, 43ஆம் செயலணி உள்ளிட்ட 20 அரசியல் கட்சிகள், இலங்கை ஆசிரியர் சங்கம் உள்ளிட்ட 150இற்கும் மேற்பட்ட பொது அமைப்புகள், தொழில்சங்கங்கள் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன.

இதனிடையே, இலங்கை வர்த்தக சங்கம் உள்ளிட்ட வணிகம் சார் அமைப்புகள் சில இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு கேட்டுள்ளன.

போராட்டத்தை ஒட்டி கொழும்பில் - குறிப்பாக பேரணி நகரும் பாதைகள், காலிமுகத்திடல் பகுதிகளில் படைகள், பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## 10 மில்லியன்...

கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதன் உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்பளிப்பு செய்யப்பட்ட டீசல் இந்த மாத இறுதியில் டிசெம்பர் மாதத்துக்குள் இலங்கைக்கு கிடைக்கும் என்றும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த மாத இறுதியில் சீனாவின் டீசல் கிடைக்கும் என்று மின்சக்தி எரிசக்தி அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஐ)

## சுடுவதென்றால்...

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக நேற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் வாரம் எதிர்வரும் 21 - 27 வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது. இந்நிலையிலேயே நேற்று சிரமதானப் பணியை அவர்கள் மேற்கொண்டனர்.

இந்நிலையில், முன்னர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இடத்திலுள்ள முகாமில் இருந்த இராணுவத்தினரும் சிரமதானம் செய்து கம்பங்கள் நட்டு பௌத்த கொடியை பறக்க விட முனைந்தனர். இதன்போது இரு தரப்பினருக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டு தர்க்கமானது.

இந்த சமயத்தில், சிரமதானத்தில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக இராணுவத்தினர் ஒளிப்படங்கள், காணொலிகளை எடுத்தனர்.

வாக்குவாதம் முற்றிய நிலையில், கஜேந்திரகுமார், "பௌத்த கொடியை நட்டால் நாம் கழற்றுவோம். சுடுவதென்றால் சுடுங்கள். புலிகளை அழிப்பதாகக் கூறி பாவம் தேடிய தரப்புகள் இன்று நாட்டை அழித்து - ஆட்சியிலிருந்து விரட்டப்பட்டுள்ளனர். மேலும் மேலும் பாவங்களை தேடாதீர்கள் என்று கூறினார்.

சில மணி நேரங்கள் முன்னணியினரின் செயல்பாட்டை குழப்பும் விதமாக நடந்த படையினர், பின்னர் அங்கிருந்து சென்றனர். இதையடுத்து, மழைக்கு மத்தியிலும் சிரமதானப் பணி முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த சிரமதானப் பணிகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், பேச்சாளர் சுகாஷ், அந்தக் கட்சியின் ஆதரவாளர்கள், தமிழ்த் தேசிய ஆர்வலர்கள் என ஒரு தொகையினர் பங்கேற்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையிலுள்ள வீடுகள் டொலர்களில் விற்பனை!

## 43,700 அமெரிக்க டொலர்கள் இலாபம்

கொழும்பு, நவ. 02

இலங்கையில் உள்ள வீடுகளை அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யும் வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களுக்கு 3 வீடுகளை விற்பனை செய்து 43,700 அமெரிக்க டொலர்களை அரசாங்கம் ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பன்னிப்பிட்டிய - வியாட்புர, கொட்டாவ மற்றும் மாலம்பே பிரதேசங்களில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான வீட்டுத் தொகுதிகளில் இந்த வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

மேலும் 10 வீடுகளை வாங்க வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், பிரித்தானியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையர்களால் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. (அ)

# யாழ்.பல்கலை மாணவர் ஒன்றிய தலைவர் புருசோத்தமனின் 14 ஆம் ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம், நவ. 02

இராணுவத்தினரால் கடந்த 2008 நவம்பர் முதலாம் திகதி படுகொலை செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் செல்லத்துரை புருசோத்தமனின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று நண்பகல் யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்களால் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.



இதன்போது செல்லத்துரை புருசோத்தமனின் நினைவுருவ படத்திற்கு பல்கலை மாணவர்ளால் ஈகச்சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தி அக வணக்கமும் இடம்பெற்றது. தொடர்சசியாக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சி.ஜெல்சினால் நினைவுரையும் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவரான இவர் மிகவும் இக்கட்டான காலப்பகுதியில் (2006-2007) கலைப்பிட மாணவர் ஒன்றியத் தலைவராகப் பொறுப்பேற்று மாணவர் நலனிலும் பல்கலைக்கழக நலனிலும் அக்கறை கொண்டு செயற்பட்டதுடன் தமிழ்த்தேசிய நலனிலும் பற்றுடையவராகத் திகழ்ந்தார். (அ)

# கடன் பெறும் வரம்பை திருத்துவதற்கு அனுமதி

கொழும்பு, நவ. 02

2022 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் கடன் பெறும் எல்லையை திருத்துவதற்கான பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின்படி, 2022 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட கடன் பெறும் எல்லையை திருத்துவதற்கு சட்ட வரைவாளர் தயாரித்த சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த மசோதா இப்போது அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, பின்னர் பாராளுமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும். (அ)

# தலை, கைகள், கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் வவுனியாவில் ஆணின் சடலம்

வவுனியா, நவ. 02

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் தலை, கைகள், கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றுமுன்தினம் கொழும்பு நோக்கிச் சென்ற ரயில் கனகராயன்குளம் பகுதியில் பயணித்த போது ரயில் பாதையில் ஆண் ஒருவருடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தையடுத்து தலை, கைகள், கால்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் குறித்த ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உடனடியாக ரயில் திணைக்களத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து சடலத்தை மீட்டு கனகராயன்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சடலம் மீட்கப்பட்ட ஆண் ரயிலுடன் மோதி வித்துக்குள்ளானதால் மரணமடைந்ததாரா? அல்லது ஏற்கனவே தாக்கப்பட்டு ரயில் பாதையில் போடப்பட்டாரா? என்ற அடிப்படையில் கனரகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

சடலம் சேட் இன்றி கறுப்புக் காற்சட்டை அணிந்தவாறு காணப்படுகின்றது.

குறித்த சடலம் கனகராயன்குளம் பகுதியைச் சேர்ந்தவர் இல்லை என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# காலியில் 24 ஆயிரம் குடும்பங்கள் கடுமையான உணவு நெருக்கடியில்!

கொழும்பு, நவ. 02

காலி மாவட்டத்தில் 24,000இற்கும் அதிகமான குடும்பங்கள் கடுமையான உணவு நெருக்கடியில் உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக மாவட்ட செயலாளர் சாந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்த அவர், அந்தக் குடும்பங்களில் சுமார் 800 ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

மாதம்பகம, ஹிக்கடுவை மற்றும் பல பிரதேச செயலகங்களில் உள்ள குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளை எதிர்கொள்கின்றனர் என அவர் தெரிவித்தார்.

ஆபத்தில் உள்ள குடும்பங்களில் குழந்தைகளுக்கு மேலதிகமாக கர்ப்பிணித் தாய்மார்களும் இருப்பதாக காலி மாவட்ட செயலாளர் கூறினார்.

எவ்வாறாயினும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலையீட்டின் மூலம் உரிய இடர்பாடுகள் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவு உள்ளிட்ட உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ஆலயத்தில் சறுக்கி வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 02

ஆலய வழிபாட்டுக்குச் சென்றவர், கால் கழுவும் தண்ணீர்க் குழாயின் அருகில் சறுக்கி வீழ்ந்து காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்துள்ளார்.

யாழ். தென்மராட்சி, மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சண்முகலிங்கம் கேசவநாதன் (வயது-52) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தினமும் ஆலய வழிபாட்டுக்காக செல்லும் இவர், வழமை போல கால் கழுவச் சென்றபோது சறுக்கி வீழ்ந்து தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட வேளையில் அவர் உயிரிழந்துள்ளார். (அ)

## மரண அறிவித்தல்



மலர்வு 12 - 04 - 1925

உதிர்வு 01 - 11 - 2022

### இரத்தினம் அன்னம்மா

சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும், இலக்கம் -16, அம்மன் வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட இரத்தினம் அன்னம்மா அவர்கள் நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை, மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற விசுவநாதர், தங்கமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற விசுவநாதர் இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், இசைவாணி, நம்பியாரூரன், திருவாரூரன் அவர்களின் அன்புத் தாயாருமாவார். காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சிவக்கொழுந்து, கந்தையா, செல்லையா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, விசாலாட்சி, மார்க்கண்டு, சின்னாரிப்பிள்ளை, கனகம்மா ஆகியோரின் மைத்துணியும் ஆவார். காலஞ்சென்ற சண்முகதாஸ் மற்றும் இராஜரஞ்சினி, சித்திரா ஆகியோரின் மாமியாரும், சுகர்திகா, சிவதீபன், செந்தூரன், மயூரன், விகர்ணன், சஞ்சயன், விதுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனபாயன், அஞ்சனா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (01.11.2022) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இலக்கம் -180, பிரதான வீதி, வைற் ஹவுஸ் மலர்ச்சாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் மாலை 4.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**இ.திருவாரூரன் (மகன்) வட்ஸ்அப் 14375330492**
**இ.நம்பியாரூரன் (மகன்) வட்ஸ்அப் 4168751680**
**பேர்த்தி னுசு சி.சுகர்திகா வட்ஸ்அப் 447951304510**

அமெரிக்க லொத்தர் இலவச விசா
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
Passport அவசியமில்லை
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இன்னும் ஐந்து நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
ஒரே ஒரு அரிய சந்தர்ப்பம்
55'000 விசாக்கள் இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்
V2 Travels and Tours Facebook
V2 Travels 0768226240 0768226244

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.11.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.